நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பன்னிரண்டு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (05.08.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 251

# வடக்கின் நான்கு பகுதிகளில் நேற்று முழுவதும் கடும் மோதல்கள்

## தொடர்ந்து நடைபெற்றதாக படைத்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 5

**வட மாகாணத்தின் நான்கு கள முனைகளில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று முழுவதும் கடும்மோதல்கள் நடைபெற்றதாக படைத்தரப்புத் தெரிவித்தது.**

**வவுனியா, மன்னார், மணலாறு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள களமுனைகளில் தொடர்ச்சியாக நடைபெற்ற கடும் மோதல்களில் விடுதலைப் புலிகளுக்கு இழப்புகள் ஏற்பட்டதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்றிரவு அறிவித்தது.**

நேற்றைய மோதல்களின் போது பத்துப் படையினர் கொல்லப்பட்டனர்; 14படையினர் காயமடைந்தனர் என்று தெரிவித்த ஊடக மத்திய நிலையம் -

இந்த மோதலில் 36புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்னர்; 34பேர் காயமடைந் தனர் என்றும் அறிவித்தது.

மன்னார் வெள்ளங்குளம் வடக்குப் பகுதியில் மிகக் கடும் மோதல் இடம் பெற்றது என்றும் -

அந்த மோதலில் 26 விடுதலைப் புலிகளும் ஐந்து படையினரும் கொல்லப்பட்டனர் - என்றும் ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது.

எனினும் இந்த மோதல்கள் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து நேற்றிரவு வரை தகவல் எதுவும் வெளியிடப் படவில்லை.

இரணைதீவில்

மேலும் -

இரணைதீவில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றையும் கடற் புலிகளின் படகு இரண்டையும் தாம் அழித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை**

*பிரபல பொருளியல் ஆசிரியர்*

**வே.கருணாகரன்**

(யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி)

தயாரித்த **பொருளியல்**

புதிய விடயங்கள் விடைகளுடன்

**உள்ளே** *8 ஆம் பக்கத்தில்*

**புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள்**

*திருமலை மாவட்டத்தின்*

*பிரபல ஆசிரியர்கள்*

**எஸ்.தயாளலிங்கம்**

**பி.பத்மநேசன்**

*தயாரித்தது*

**உள்ளே** I + II ஆம் பக்கங்களில்

## தனங்கிளப்பில் தவறுதலான வெடி விபத்தில் இராணுவத்தினர் மூவர் உயிரிழப்பு

### ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 05

தென்மராட்சி, தனங்கிளப்புப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் தவறுதலாக கைக்குண்டு வெடித்ததில் இராணுவத்தினர் மூவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாய மடைந்தனர். படைத்தரப்பு இத் தகவலை வெளியிட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீதான கெடுபிடிகளை மட்டுமே சார்க் உச்சி மாநாடு சாதித்திருக்கிறது

**-மனோகணேசன்**

கொழும்பு, ஒக.5

சார்க் மாநாட்டால் அப்பாவிப் பொது மக்கள், கெடுபிடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கப்பட்டமையைத் தவிர நாட்டுக்கு வேறு என்னதான் நன்மை விளைந்தது? எதுவுமேயில்லை.

இவ்வாறு சீற்றத்துடன் தெரிவித்திருக்கிறார் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவருமான மனோ கணேசன் எம். பி.

15ஆவது சார்க் மாநாடு இம்முறை கொழும்பில் பெரும் எடுப்பில் நடந்து முடிந்திருக்கின்றது. இந்த மாநாட்டை அரசு, தன்னைப் பெருவாரியாகப் பிரசாரப்படுத்துவதற்காகவே கொழும்பில் நடத்தியது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாய - பஸில் - பொன்சேகாவுக்கு எதிராக அமெரிக்காவில் சட்ட நடவடிக்கை

### தயாராகிறது அங்குள்ள இனச்சுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு

நியுயோர்க், ஒக.5

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும் நாடாளுமன்ற உறுப் பினருமான பஸில் ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகிய அமெரிக்கக் குடிமகன்கள் தமிழின அழிப்பு நடவடிக் கையை மேற்கொண்டு வருவதாகக் குற் றம்சுமத்தியுள்ளஇனச்சுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு, அம் மூவருக்கும் எதிராக அமெரிக்காவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு விடுத்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு கூட்டிச் செல்லப்பட்டவர் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்பு

### வவுனியா வேப்பங்குளத்தில் சம்பவம்

வவுனியா, ஒக5

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் விசாரணைக்கென கூட்டிச்செல்லப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர், நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த வடிவேலு யோகேந்திரன் (வயது 38) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்றைய தினம் அவரது வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரை விசாரணைக்கு என்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## கைத் தொலைபேசி , மின்கு மிழ், மோட்டார் சைக்கிள் பாவனைக்கு வெவ்வேறு வகை வரிகள்!

கொழும்பு, ஒக.5

கைத்தொலைபேசி, மின்குமிழ், மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு புதிய வகை வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

அனைத்து கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்கும் இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் இரண்டு வீத சூழல் பாதுகாப்பு வரி விதிக்கப்பட உள்ளது.

அரச வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இந்த வரி விதிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றும் இந்த வரி மூலம் திரட்டப்படும் நிதி சுற்றாடல் பாதுகாப்புக்காகவே செலவிடப்படும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் உதய கம்மன்வில்ல தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை முதல்வர் பிள்ளையானுக்கு வழங்குவதா?

### சீறுகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஒக.5

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் கேட்பதுபோல் கிழக்கு மாகாணத் திற்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங் களை வழங்க அரசு ஒருபோதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் அவ்வாறு வழங்கினால் தனிநாடு உருவாக அது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிடும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு அதிகாரங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக இந்த நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்றும் அந்த இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செயலகத்தில் நேற்றுக் குண்டுப்புரளி ஒரு மணி நேரத்துக்கும் மேலாக படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், ஒக 5

யாழ்.செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் குண்டுப்புரளி கிளப்பப்பட்டதால் பணியாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

செயலகத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகச் செயலகத்தின் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது எனச் சொல்லப்படுகிறது.

செயலக உயர் அதிகாரிகள் உடனடியாக அது குறித்து படையினரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்து பெரும் எண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைத்தொலைபேசிப் பாவனை கட்டுப்பாட்டை எதிர்த்து வழக்கு

### மேன்முறையீட்டு மன்றில் 'ரிட்' மனு

கொழும்பு, ஒக.5

கையடக்கத் தொலைபேசிகளையும் சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளையும் அதன் உரிமையாளர் தவிர வேறு யாரும் பயன்படுத்தக் கூடாது எனத் தெரிவித்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள சட்ட விதிகள், இயற்கை நீதிக்கு முரணானவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# யாழ்.மருத்துவபீட வளாகத்தில் இயங்கும் விவசாயபீட கற்றல் செயற்பாடுகள் பாதிப்புறும் நிலைகுறித்து மாணவர் கவலை

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்.பல்கலைக்கழகத்தில் இதுவரை காலமும் தாம் மேற்கொண்டு வந்த கற்றல் செயற்பாடுகள், மருத்துவபீட நிர்வாகத்தின் கடும்போக்கினால் பெரும் சிரமங்களை தற்போது எதிர்கொண்டுள் ளதாகவும் தமது கல்வி பாதிப்புறும் நிலை தோன்றியுள்ளதாகவும் விவசாயபீட மாண வர் ஒன்றிய வட்டாரங்கள் கவலை தெரிவித் துள்ளன.

தமது இப்போதைய இக்கட்டான நிலை குறித்து துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் மாணவர் வட்டாரங்கள் உதயனுக்கு நேற்றுத் தெரி வித்தன.

இது தொடர்பாக விவசாய பீடத் தரப்புகள் மூலம் அறிய வந்ததாவது:

1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம் இது வரை ஒரு நிரந்தர கட்டடம் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றது.

விவசாய பீடத்தின் கற்றல் செயற்பாடுகள் சிலவற்றுக்கு மருத்துவபீடக் கட்டடத்தை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் காரணமாகக் கடந்த சில ஆண்டுகளாக நாம் மருத்துவபீடக் கட்டடத்தைப் பயன்படுத்தி வந்தோம். உதாரணமாக இயந்திரவியல், இரசாயனவியல் ஆய்வு கூடங்கள் மருத்துவ பீடக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றன. அத்துடன் இந்தத்துறைசார் தலைவர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும் அங்கு அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

எனினும் தற்போது இரசாயனவியல் ஆய்வுகூடம் தவிர ஏனையவற்றைப் பயன்படுத்தக் கூடாது எனவும் விவசாய பீட உத்தியோகத்தர்கள் எவரும் தமது வாகனங்களை மருத்துவ பீட வளாகத்துக்குள் கொண்டு வரமுடியாது எனவும் கடிதம் மூலம் மருத்துவபீட நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விவ சாய பீடத்தின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது விவசாய பீடத்துக்கு வேறு இடவசதிகள் இல்லாமையால் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் அதிகுறைந்த வளங்களுடன் இயங்கும் பீடமாக எமது விவசாயபீடம் உள்ளது. தற்போது கற்றல் செயற்பாடுகள் இரண்டு தனியார் வீடுகளில் இ[illegible]பெற்று வருகின்றன. எனினும் மா[illegible]களின் சுதந்திரமான கல்விக்கு அ[illegible] ஏற்றதாக இல்லை.

ஆகையால் பல்கலைக்கழக நிர்வாகம் இது விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென விவசாய பீட நிர்வாகமும் மாணவர்களும் எதிர்பார்க்கின்றனர் என்றும் கூறப்பட்டது. (அ-50)

## பண்டத்தரிப்பில் பாழடைந்த கிணற்றில் சடலம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.5

பண்டத்தரிப்புமுல்லையடிப்பகுதியில் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. அதே யிடத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் (வயது-57) என்பவரின் சடலமே மீட்கப் பட்டது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமற்போனதாக கருதப்பட்ட இவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தினார். சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர் களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்திரவிட்டார். (அ-1)

## தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் கரையொதிங்கிய இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், ஓக.5

அரியாலை, மணியம்தோட்டப் பகுதியில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுக் கரையொதிங்கியது.

தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஒதுங்கிய இச்சடலம் குறித்து யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் விசாரணைகளை நடத்தினார்.

சலடத்துடன் 3 கிரனேட்டுகளும் காணப்பட்டதாக விசரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-25)

## குடும்பப் பெண் மரணம்

நாவற்குழி, ஓக.5

கடுமையான எரிகாயங்களுக்கு ஆளாகிய குடும்பப் பெண், சிகிச்சை பயனளிக்காத நிலையில் யாழ்.போதனா வைத்தியாலையில் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கைதடி வடக்கு, நவபுரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான திருமதி சிவலிங்கம் செல்லம்மா (வயது 46) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

எரிந்து கொண்டிருந்த ''இலாம்பு''க்கு ''கான்'' மூலம் எண்ணெய் விட்டபோதே அது வெடித்து தீப்பற்றியதாகக் கூறப்படுகின்றது. (1-288)

## பிள்ளையார் கோபுரத்தில் இனங்காணப்படாத பறவை குஞ்சுகளுடன் தங்கியுள்ளது

யாழ்ப்பாணம், ஓக. 5

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் கோபுரத்தி[illegible]ங்கு உள்ளவர்களால் இனங்காண முடியா[illegible] பென்ன[illegible]ம்பெரிய பறவை ஒன்று [illegible]னது குஞ்சுகளுடன் தங்கியுள்ளது.

ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, கோபுரத்தின் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட வேளையில் குஞ்சுகளுடன் குறிப்பிட்ட பறவை தங்கியிருப்பது தெரியவந்தது.

கோபுரத்தில் ஏறிப்பார்க்க முயன்ற சிலர் பறவையினால் கொத்தித் தாக்கப்பட்டனர். பறவையின் குஞ்சுகளில் ஒன்றை பிடித்து கூட்டினுள் அடைத்த போதிலும் அது உணவு ஏதும் அருந்தாததால் மீண்டும் அது கோபுரத்தில் இருந்த இடத்திலேயே விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பறவையின் இனம் என்ன, அது எப்போது கோபுரத்தினுள் வந்தது என்ற விவரம் எதுவும் எவருக்கும் தெரியவில்லை என்று அப்பகுதியைச் சேர்ந்தோர் கூறினர். (அ-207)

## கண்ணீர் அஞ்சலி

எமது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு அரும்பாடுபட்டுவரும் தனாதிகாரி அ.கிருஸ்ணமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அ.அன்னலட்சுமி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய், சுழிபுரம்.

பணிப்பாளர் சபையும் பணியாளர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி நல்லினி சிவராம் அவர்களின் தாயார்

### திருமதி வேதநாயகி கனகசபாபதி

அவர்களின் மறைவுகேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(76971)

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை மனோன்மணி



சுதுமலை மேற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மனோன்மணி 03.08.2008 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், நாகரெட்ணம், சாந்தசொரூபா(கனடா), காலஞ்சென்ற இந்துமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கணபதிப்பிள்ளை காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியம், காலஞ்சென்ற செல்லம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும், பரம்சோதி, ஞானகுமார்(கனடா), விக்னேஸ்வரன், ஜெகதீஸ்வரன்(ஆஸ்திரேலியா), சுகுணேஸ்வரன் (அமெரிக்கா), யோகேஸ்வரன்(அமெரிக்கா), விமலேஸ்வரன் (நோர்வே), தபோதினி(வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), நந்தினி(அமரிக்கா), நளாயினி(கணக்காய்வுத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), பானுமதி(நோர்வே), திருச்சிற்றம்பலம் (லண்டன்) ஆகியோரி[illegible] மாமியாரும், கணேசலிங்கம், பத்மினிதேவி(கொழும்பு), சிறிகாந்தலிங்கம்(லண்டன்) ஆகியோரின் பெரியதாயாரும், நிரோஷனின்(கனடா) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.08.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

(76975)

தகவல்:
மருமகள் - பரம்சோதி.

## இன்றைய ஆட்டம்

மந்திகை, ஓக.5

மாலிசந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பருத்தித்துறை உதைந்தாட்ட லீக்கின் அநுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப 3.30மணி - வல்வெட்டித்துறை ஆதிசக்தி வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க.

* பி.ப 4மணி - கரவெட்டி கலட்டி ஐ.வி.க. எதிர் வதிரி டயமன்ஸ் வி.க. (1-218)

## சேமலாப நிதி பதிவுகளை 15ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.5

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களின் கணக்கு இலக்கத்தினை தேசிய அடையாள அட்டைக்கு மாற்றும் வேலைத் திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமது அலுவலகத்தால் வழங்கப்பட்ட உரிய படிவங்களை குறைபாடுகளின்றி பூரணப்படுத்தி குறிப்பிட்டதிகதிக்கு முன் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (1)

## குறும்படம் வெளியீடு

மீசாலை கிழக்கு திருப்புகழ் மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு சிறுவர் பாதுகாப்பும் கல்வி மேம்பாடும் பற்றிய குறுந்திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் குறுந்திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இந் நிகழ்வில் சிறப்புரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.5

கோப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கான நிதி முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற இது தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றாதவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203)






## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் தெய்வேந்திரம் (இராசையா)

(முன்னாள் Sales Rep. The Jaffna Cooperative Stores Ltd.)



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் தெய்வேந்திரம் 31.07. 2008 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பவானியம்மாவின் (அம்பிகா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற நித்தியலட்சுமியின் அன்புச் சகோதரரும், கலாநிதி (லண்டன்), ஶ்ரீதரன் (சுவிஸ்), மஞ்சுளாநிதி (ஜேர்மனி), கிரிதரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பகீரதன் (பாபு) ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன்குமார், மஞ்சுளா, அருளானந்தம், சந்திரவதனி (சுதா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இலட்சுமணர், காலஞ்சென்ற சிவசக்திவேல் (குமரேஸ்), பாலகிருஸ்ணபிள்ளை, கைலைநாதன் ஆகியோரின் மைத்துனரும், ஆனந்ததேவி (சந்திரா), ஓங்காரமூர்த்தி (பிரதி அதிபர், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), புவனேந்திரன் (சுவிஸ்), விஜயேந்திரன் (கட்டார்), பற்குணதேவி (உருத்திரா) ஆகியோரின் தாய்மாமனும் குலசிங்கம் (U.S.A), சரஸ்வதி, சத்தியபாமா (சுவிஸ்), மாலினி, அன்பானந்தன் (பதில் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெரியப்பாவும், கஜலக்ஷன், கௌசிகன், பகீர்த்தனா, விபூசன், திபுஷா, தர்மினி, அதீசன், விதுசன், சினேகா, சயன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Krematorium ruhlebenam hain 1,13597 Berlin என்னும் முகவரியில் 05.08.2008 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: கலாநிதி(00441293531800)
ஶ்ரீதரன்(0041277442872)
மஞ்சுளாநிதி(0049303679588)
கிரிதரன்(00493060083326) (76963)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
Fulhamer allee 54,12359
Berlin brilz, Germany,
T.P.: 0049306884254.

### இளையதம்பி சுப்பிரமணியம்

சரவணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுப்பிரமணியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - நாகாத்தை தம்பதியரின்அன்பு மகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்தாச்சி, இரத்தினம் மற்றும் பாலசிங்கம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வளர்மதி, குமார், நந்தகுமார், காலஞ்சென்றவர்களான சிவகுமார், சிவநிதி, ஞானகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராணி, றேகா, கந்தசாமி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணை கிழக்கு,
வேலணை.

(76974)

தகவல்:
சு.குமார்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







"உதயன் பத்திரிகை நிறுவனமும் கொழும்பு யுனிலங்கா நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட செயலமர்வும் கருத்தரங்கும் நேற்று வடமராட்சி தெற்கு,மேற்கு கரவெட்டிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் கரவெட்டிப் பிரதேசசபைச் செயலர் எஸ்.குலநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் சிறப்பு வளவாளரும் திருகோணமலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.கணேசலிங்கம், பலாலி ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் கே.தவயோகராஜா ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

வெற்றித் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் வெற்றித் தேர்வில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுடன் வளவாளர்கள் நிற்பதையும் அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருந்தினர்களும் வளவாளர்களும் 'உதயன்' சார்பில் செய்தியாளரும் சான்றிதழ்களை வழங்குவதை அடுத்த நான்கு படங்களிலும் காணலாம்.

மாணவி ஒருவர் வினாத்தாளுடன் அமர்ந்திருப்பதை இறுதிப் படத்தில் காணலாம். (படங்கள்: கந்தா)

# சிறந்த கல்வியியலாளராக எமது மாணவர் உருவாக வகுப்பறையில் அக்கறையுடன் கற்கவேண்டும்

## முன்னாள் கல்வி அதிகாரி கூறுகிறார்

நல்லூர்,ஓக.5



சிறந்த கல்வியாளர்களாக எமது பிள்ளைகள் உருவாக வேண்டுமானால் வகுப்பறையில் அவர்கள் அக்கறையுடன் கற்க வழிய மைக்க வேண்டும்.

வகுப்பறையில் மனம்வைக்காது உள்ள மாணவர்களைச் சிறந்த மாணவர்களாக உருவாக்கும் உங்கள் பணி தோல்வியடைந்துவிடும்.

முன்னாள் கல்வி அதிகாரி சி.இராசநாயகம் இவ்வாறு ஆசிரியர்களுக்குத் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் முத்தமிழ் விழா சி.உமாகரன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் கல்வி அதிகாரி தொடர்ந்து உரையாற்றுகையில்:-

முன்பெல்லாம் எட்டுப் பாடங்களையும் கற்பிக்கும் நிலை ஓர்ஆசிரியரிடம் இருந்துள்ளது. பண்டிதமணி போன்ற பல அறிஞர்கள் அப்படிப்பட்ட ஆசிரியர்களின் வழி காட்டலுக்குள் பயின்றவர்களே.

அந்த ஆசிரியர்கள் எமது மொழியும் இந்து மதமும் வளரக் காரணமாக இருந்தார்கள்.

இன்று ஒரு ஆசிரியரால் ஒரு பாடத்தைத்தான் கற்பிக்க முடிகிறது.

இதனால் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நோக்கித் திரும்ப வேண்டியுள்ளது.

இன்றைய கல்விநிலை வறிய மாணவர்களுக்கு உபயோகமற்றதாகி விட்டது.

மொழி அறிவில் எமது பிள்ளைகள் போதிய அறிவைப் பெறக் கூடியதாக இலக்கியங்களைக் கற்க வேண்டும்.

எமது பிள்ளைகள் எல்லோருமே பெரும் வசதிபடைத்தவர்கள் அல்ல. எனவே இங்கு கற்ற நீங்கள் சமுதாயத்துடன் இணைந்து எமது பிள்ளைகளுக்கு நல் வழிகாட்டிகளாகவும் சிறந்த ஆசானாகவும் விளங்க வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களிலும் நீங்கள் பெற்றுள்ள வளர்ச்சியின் அடையாளமாக இன்றைய விழாவும் உங்களது வெளியீடான கலைமலரும் அமைந்துள்ளன.

எமது மொழியின் சிறப்பையும் கோப்பாய் ஆசிரியர் கல்லூரி தமிழ் மொழிக்கும் எமது மக்களுக்கும் ஆற்றிவரும் அளப்பரிய பங்களிப்பையும் உங்களது செயற்பாடுகளினூடாகப் பெருமைப்படுத்துங்கள் - என்று தெரிவித்தார். (203-111)

# மெய்வன்மைப் போட்டி

சுழிபுரம், ஓக.5

சுழிபுரம் கெங்காதேவி முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தம்பனை அம்மன் வீதிக்கு அருகில் உள்ள மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

த.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(203-28)

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது பிரேதவண்டில்

வடமராட்சி, ஓக.5

பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான பிரேத வண்டி தற்போது பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்தப் பிரேத வண்டி புலோலி தெற்கில் உள்ள சிங்கைநகர் கிராமத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

பொது மக்களின் அபிப்பிராயத்திற்கேற்பவே இவ்வண்டி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிறுத்தப்பட்டுள்ளது. (203-236)

# பருத்தித்துறைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

வடமராட்சி, ஓக.5

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அல்வாய் திக் கம் கலாசார மண்டபத்தில் சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெறவுள்ளன.

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்.மாவட்ட மீள் எழுச்சித் திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.விசுவலிங்கம், யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன், மருதங்கேணி பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார், பருத்தித்துறை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி வே.ஜெயராசா, பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் செயலாளர் சி.பசுபதி, சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் பா.பாலசுப்பிரமணியம், 'நெக்ரெப்' நிறுவன யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.வீரபத்திரப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

கர்நாடக சங்கீதம், நடனம், சிற்பம், வாய்ப்பாட்டு நாட்டுக்கூத்து, பௌராணிகர் ஆகிய துறைகளைச் சேர்ந்த கலைஞர்கள், பருத்தித்துறை பிரதேசசபையில் நீண்டகாலம் தொடர்ச்சியாகப் பணியாற்றி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள், சென்ற வருடம் நடைபெற்ற தரம் 5 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மாணவர்கள் கௌரவிப்பு ஆகியனவும் இடம் பெறும்.

முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்ச்சி, இசை நிகழ்ச்சி என்பனவும் நடைபெறும். (203-236)

# கோப்பாய் கோட்ட மட்டத்தில் சாதாரணதர மாணவர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.5

கோப்பாய் கோட்ட மட்டப் பாடசாலைகளில் இருந்து டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஆங்கில பாடப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை நான்கு மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களிலும் பரீட்சைகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆங்கிலபாடப் பயிற்சிகள் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தொடர் மதிப்பீடுகள் செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன.

அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் இந்தப் பயிற்சி நெறி நடத்தப்பட்டு வருகின்றது என்றும் மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (203-302)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

வடமராட்சி ஓக.5

பருத்தித்துறை நகரப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளைக் கடுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதென பருத்தித்துறை நகரசபை தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட கட்டாக்காலி கால்நடைகள் அப்பகுதியில் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே, இவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-236)

# கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஓக.5

ஆரம்பக்கல்வி தொடர்பான கருத்தரங்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள வள நிலையத்தில் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கோட்டக்கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலை ஆசரியர்களுக்கு தொடர்ந்து மூன்று நாள்களுக்கு இந்தப் பயிற்சி நடைபெறும்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தில் இருந்து இங்கு வருகை தந்துள்ள ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.இராஜேஸ்வரன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. (203-302)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.5

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கலைப் பிரிவு மாணவர்களுக்கென சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு மயிலணி சைவத்தமிழ் வித்தியாலயத்தில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (202)

# கோழிக்குஞ்சு விநியோகம்

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் அச்சுவேலிப் பிராந்திய கோழிப்பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு நாள் பால் பிரிக்கப்படாத கலப்பினக் கோழிக்குஞ்சுகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு விற்பனை செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதான வீதியிலுள்ள யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய அலுவலகத்திலே விற்பனை செய்யப்படும்.

கோழிக்குஞ்சுகளை யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ளவர்கள் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.ஸ்ரீகுமரன் எழுதிய 'செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' நூல்வெளியீட்டு விழா நேற்று பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிற்பி சரவணபவன் நூலை வெளியிட்டு வைக்க திருமதி சோ.ஸ்ரீகரன் பெற்றுக்கொள்வதையும் நடுவில் நூலாசிரியர் சு.ஸ்ரீகுமரன் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராஜா யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன், சிரேஷ்ட ஆசிரியை திருமதி தி.கருணீசன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# இரு கைகளையும் பொருத்தும் சிகிச்சையில் ஜேர்மனிய மருத்துவர்கள் சாதனை

சில வருடங்களுக்கு முன்பு விபத்தொன்றில் இரு கைகளையும் இழந்த விவசாயி ஒருவருக்கு மாற்று அறு வைச் சிகிச்சையின் மூலம் இறந்தவர் ஒருவரின் கைகளைப் பொருத்தி ஜேர்மனிய மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இரட்டை கைகள் மாற்று அறுவைச் சிகிச்சையொன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை இதுவே உலகில் முதல் தடவையாகும்.

முனிச் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள், 54 வயதான மேற்படி விவசாயிக்கு 15 மணித்தியால அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு இக்கரங்களைப் பொருத்தியுள்ளனர்.

இதற்காக மேற்படி அறுவைச் சிகிச்சைக்குச் சிறிது நேரத்திற்கு முன்பு உயிரிழந்த இளைஞர் ஒருவரது கரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு முன் 2003 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவில் கையின் முன்பகுதியை மட்டும் இழந்த ஒருவருக்கு கரமாற்று அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. ஆனால் தோள் பகுதிக்குச் சிறிது கீழே கரங்கள் துண்டாக்கப்பட்ட ஒருவருக்கு கரமாற்று சிகிச்சை மேற்கொள்ளப்படுவது இதுவே முதற்தடவையாகும். எனினும் அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்டவரால் உடனடியாகக் கையை அசைக்க முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்நபரின் துண்டிக்கப்பட்ட கைப் பகுதிகளுக்கும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்குமிடையே தினசரி சுமார் ஒரு மில்லி மீற்றர் வரையில் நரம்புகள் வளர்ந்து இணைப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடே அவரால் கையை அசைக்கக் கூடியதாக இருக்கும் எனமருத்துவர்கள் கூறுகின்றனர். (202)

யாழ். மாவட்ட

# நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் போசாக்கை மேம்படுத்துவதற்கு திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.மாவட்டத்திலுள்ள நலிவுற்ற மக்களின் பேர்ச்சாக்கை தேவை மற்றும் அவர்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு உணவு விவசாய நிறுவனம் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

முதற்கட்டமாக மாவட்டத்தில் உள்ள பத்து கால்நடை அபிவிருத்திப் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட 400 பயனாளிகளுக்கு 4 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை பங்கிட்டு வழங்கி வருகின்றது.

பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கால்நடைத் திணைக்களத்தின் ஊடாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது என நிறுவனத்தினர் தெரிவித்தனர். (202)


## ஆடிமாத உத்தர விழா



உரும்பிராய் சந்தியில் வீற்றிருக்கும் ஐயப்ப சுவாமிக்கு இன்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகம், பூஜை, பஜனை 6.30 மணிவரை நடைபெறும்.

'சரணம் ஐயப்பா'

"ஐயப்பா சரணம் என்றிட ஐம்பூதங்களும் அடி பணிந்திடுமே"

உபயம்:
கமலராஜ், மனோகரி உரும்பிராய். தேவஸ்தான குருசுவாமி.


## மரண அறிவித்தல்

### திருமதி வேதநாயகி கனகசபாபதி



நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது உரும்பிராயில் வசித்தவருமான திருமதி வேதநாயகி கனகசபாபதி அவர்கள் நேற்று (04.08.2008) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் சின்னப்பு கனகசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr.பூலோகசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னப்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்), வெற்றிவேலு (இளைப்பாறிய அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) மற்றும் செல்வநாயகி, ஸ்ரீநிவாசன், இராசநாயகி, அபயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சேய்ந்தன் (ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), நல்லினி (ஆசிரியை, யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சேயோன் (ஆசிரியர், அத்தியார் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2008) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் உரும்பிராய் வடக்கு கற்பகவிநாயகர் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.சிவராம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி.

தகவல் :
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மக்கள் பிரச்சினையில் உதயன்

# பத்திக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் பதில்

தங்கள் 29.07.2008 பத்திரிகையில் வைத்தியசாலையில் காணப்படும் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியமைக்கு நன்றி. எனினும் இந்தக் குறைபாடு களுக்கான சூழ்நிலைகளையும் காரணங்களையும் உங்களுக்கும் பொதுமக்களுக்கும் விளக்குவது எமது கடமையாகும்.

**வயோதிபருக்கான தனிப்பட்ட பராமரிப்பு நிலையமும் மருந்து கொடுக்கும் பகுதியும்**

இவ்வைத்தியசாலையில் இடப்பற்றாக்குறை ஊழியர் பற்றாக்குறை இருப்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். வெளிநோயாளர் பகுதியில் வயோதிப நோயாளிகளுக்கெனத் தனியான பிரிவை அமைப்பதற்கு அறை வசதி, வைத்திய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் தட்டுப்பாடு காரணமாக செயற்படுத்த முடியாமலுள்ளது. அத்துடன் வெளிநோயாளர் பகுதியும் சிகிச்சைக் களப்பகுதிகளிலுமுள்ள மருந்தகங்களிலும் போதுமானளவு மருந்தாளர்கள் இல்லை. அதாவது 30 வரையான மருந்தாளர்கள் எமது வைத்தியசாலைக்கு தேவைப்படுமிடத்தில் 18 பேர் மட்டுமே இங்கு கடமையிலுள்ளனர். ஆகையால் மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்த பின்பு விரைவில் வயோதிபர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

**வெளிநோயாளர் பகுதியில் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்.**

இப்பகுதி தற்காலிகமாக புனரமைப்பு வேலை காரணத்தால் நிறுத்தப்பட்டது. மீண்டும் அது இயங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**விடுமுறை தினங்களில் சிகிச்சை நிலையங்கள்**

அநேகமாக விசேட சிகிச்சை நிலையங்கள் விடுமுறைகள் தினங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறுகின்றன. தவறுதலாகத் திகதிகள் கொடுக்கப்பட்டிருப்பின் நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வரவும்.

**லொக்கர்**

எல்லா நோயாளிகளுக்கும் அவர்களுக்குத் தேவையான படுக்கை வசதிகளும் லொக்கர்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

**கட்டாக்காலி நாய்கள்**

இது சம்பந்தமாக யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு தெரிவித்துள்ளோம். அவர் இவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதை அறியத்தந்துள்ளார்.

**நோயாளிகளை தள்ளு வண்டியில் கொண்டு செல்வதற்கு பணம் அறவிடுதல்**

இது சம்பந்தமாகப் பொது மக்களிடம் இருந்து எமக்கு எந்தவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. இது சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைத்தால் நாம் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் சம்பந்தப்பட்ட ஊழியர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை.

## ஒன்று கூடல்

யாழ.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்திலே நடைபெறவுள்ளது. (202-288)

# கையடக்கத் தொலைபேசிகளுக்கு 2 வீத சூழல் பாதுகாப்பு வரி

கையடக்கத் தொலைபேசிகளுக்கு 2 வீத பாதுகாப்பு வரி அறவிட சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த வரி தொகை சுற்றாடல் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்கப்படும் என மத்திய சுற்றாடல் அமைச்சின் தலைவர் தெரிவித்தார். (202)


## போட்டோப்பிரதி இயந்திரம் தேவை

பாவனையிலுள்ள அல்லது பழைய, (சாப்) Sharp 1118, மொடல் Sharp 1016, மொடல், Sharp 1020, மொடல் போட்டோப் பிரதி இயந்திரங்கள் விற்க விரும்புபவர்கள் பெயர், விலாசம், மொடல் நம்பர், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் கீழ் உள்ள விலாசத்திற்குக் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

[illegible] - 4123
பே/பா. உதயன்.


## 29ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### சிவபாதம் இராசம்மா

தோற்றம்
23.11.1938

மறைவு
08.07.2008

08.07.2008 அன்று இறைபதமடைந்த எங்கள் இல்லத்தின் குடும்ப விளக்கின் பிரிவுத் துயரில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் தந்தும் இறுதிக்கிரியைகளில் பலவகைகளிலும் உதவி புரிந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

கணபதிப்புலம்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
சி.சிவராசா, சி.சிவகுமார் (மகன்மார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களற்ற நிலையிலும் மாணவர்களுக்காக உழைக்கும் இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை!

## புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளி எடுத்த மாணவர்களுக்கு பணப்பரிசை வங்கியில் வைப்பிலிடும் முன்னோடிச் செயற்பாடு

பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா வங்கியில் வைப்புச் செய்து அம்மாணவர்கள் பாடசாலையை



விட்டு வெளியேறி வேறு பாடசாலையில் கல்வி கற்றாலும், தவணைப் பரீட்சையில் கடந்த தவணைப் பரீட்சைப் புள்ளிகளை விடக் கூடிய புள்ளிகளைப் பெறும்போது மேலும் ஆயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிடப்படுகின்றது. நகரப் பகுதியிலுள்ள பெரிய பாடசாலைகளே செய்ய முன்வராத, இத்தகைய மாணவர்களின் கல்விக்கு உறுதுணையான முன்னோடியான செயற்பாட்டை இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை செய்து வருகின்றது.

அருட்தந்தை பிலிப் பொன்னையா ஞாபகார்த்த நன்கொடை நிதியம் மாணவர்களின் கல்விக்கு உந்துசக்தியாகவும் உறுதுணையாகவும் செயற்பட்டு வருகின்றது.




2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் இன்றுவரை 18 மாணவர்கள் பயனடைந்து வருகின்றார்கள்.

ஏனைய பாடசரலைகளில் இருந்தும் வித்தியாசமான, முன்னேற்றகரமான எண்ணங்கள், சிந்தனைகளுடன் செயற்படும் இப்பாடசாலை, 1873ஆம் ஆண்டில் கிறிஸ்தவ மிஷனரியில் அன்றைய ஆயர் மேதகு ஹென்றி யூலியனினால் சிறிய பாடசாலையாக ஆலய வளவினுள் உருவாக்கப்பட்டது.

1904ஆம் ஆண்டு முதல் இப் பாடசாலையில் ஆங்கிலமொழியும் கற்பிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து மக்களிடையே ஆங்கிலக் கல்விப் பரம்பல் இப் பகுதியில் ஏற்படத் தொடங்கியது. இதன் காரணமாக 1907 ஆம் ஆண்டில் ஆலய வளவில் ஓர் ஆங்கிலப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் குறித்த ஆங்கிலப் பாடசாலை அன்றைய பேராயர் ஹென்றி யூலியன் நாமத்தைத் தாங்கி புனித ஹென்றியரசர் கல்லூரியாக தனித்து இயங்கத் தொடங்கியது. எனினும் இளவாலை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையானது. தொடர்ந்தும் தமிழ்ப் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது.

சுமார் 135 வருடங்களைக் கடந்துள்ள இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை, தற்போதும் தமிழ் பாடசாலையாகவும் தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புகளுடனும் இயங்கி வருகின்றது.

தற்போது இப்பாடசாலையில் 135 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். அதிபருடன் நான்கு ஆசிரியர்களும் தற்காலிக இணைப்புப்பெற்ற ஓர் ஆசிரியருமாக ஆறு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். வழமையாக பின்தங்கிய எல்லாப் பாடசாலைகளிலும் காணப்படுவதைப் போன்று இங்கும் ஆங்கிலப் பாடத்திற்கு ஆசிரியர் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

பழைய மாணவர்களின் நிதி உதவி மூலம் பாடசாலை மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டு, சிங்கள மொழியும் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பின்னூட்டல் வகுப்புகளும் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் அதிபர் செல்வி அன்ரனிசாந்தா மரியாம்பிள்ளையுடன் உரையாடியபோது பாடசாலையின் தற்போதைய நிலை பற்றி தெரிந்தகொள்ள முடிந்தது.

கிடைக்கும் வளங்கள் மாணவர்களுக்கு முழுமையாகச் சென்றடையவேண்டும். மாணவர்களின் எதிர்காலம் முக்கியமானது. சிறுவயதிலேயே ஏற்றத்தாழ்வுகள் மத வேறுபாடுகள் இன்றி அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் வாழவேண்டும் என்பதற்கு அத்திவாரம் இடும் செயற்றிட்டங்களை அதிபரும் ஆசிரியர்களும் முன்னெடுக்கின்றார்கள்.

இதற்குச் சிறந்ததோர் உதாரணம் காலை வேளையில் பிரார்த்தனை இடம்பெறும் போது அனைத்து மாணவர்களும் ஓர் இடத்தில் கூடிப் பிரார்த்திக்கின்றார்கள். கிறிஸ்தவப் பிள்ளைகள் வழிபாடு நிறைவேற்றிய பின் இந்துப் பிள்ளைகளும் தத்தமது வழிபாடுகளை மேற்கொள்வது பாராட்டப்படவேண்டியதாகும்.

பாடசாலையில் கட்டட வசதியின்மை காணப்படுகின்றது. சில வகுப்புகள் தற்போது பாடசாலைக்கு வெளியே தனியார் இல்லத்திலும் நடைபெறுகின்றன.

தற்போது ''நிக்கொட்'' நிறுவனத்தின் திட்டத்தின்கீழ் 110 அடி x 25 அடி நீளமான கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்த்தினப் போட்டிகளிலும் சரி, ஆங்கிலதினப் போட்டிகளிலும் சரி மாணவர்கள் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம் வரை சென்று வெற் றியீட்டி வருகின்றனர்.

விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்கள் கலந்துகொண்டாலும் சிறப்பான பெறுபேறுகளை எட்டமுடியவில்லை. இதற்குப் பல காரணிகள் உண்டு. பாடசாலைக்கு இதுவரை ஒரு விளையாட்டு மைதானம் இல்லை. அதனைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளும் கூட முழுமையாகக் கைகூடாத நிலையே தொடர்கின்றது.

மாணவர்களின் ஆற்றலைத் தூண்டும் வகையில் சதுரங்க விளையாட்டை மாணவர்களிடைய அறிமுகம் செய்து அதில் ஓரளவு வெற்றியும் கிடைத்துள்ளது. சதுரங்கப் பயிற்சியளித்து வந்தவர் தற்போது வேறு இடம் சென்றமையால் அதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இப்பாடசாலையில் உள்ள ஏனைய ஆசிரியர்களை பயன்படுத்தி தொடர்ந்தும் சதுரங்கப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நடவடிக்கை ஆசிரிய குழாமைக் கொண்டு சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த ஈண்டு 15 பேர் பரீட்சைக்குத் தோற்றி 9 பேர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள். இம்முறை இடம்பெறும் பரீட்சைக்கு 17 பேர் தோற்றுகின்றார்கள். நல்ல பெறுபேறு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலையில் இருக்கும் நூலகத்திற் கு வேண்டிய நூல்களை மாணவர்கள் தமது பிறந்தநாள் பரிசாக அன்பளிப்புச் செய்கின்றனர். பழைய மாணவர்களும் மற்றும் முன்னாள் அதிபர் அடைக்கலமுத்துவும் ஒரு தொகுதி நூல்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பாடசாலையில் காணப்படும் தளபாடங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு பொருத்தமானதாகக் காணப்படவில்லை.

இப்பாடசாலையில் அதனைச் சூழவுள்ள சுற்றாடலைச் சேர்ந்த பிள்ளைகளே கல்வி பயின்று வருகின்றார்கள். இவர்களில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிள்ளைகளே அதிகமாகக் காணப்படுகின்றார்கள். பிள்ளைகளுக்கு வேண்டிய காலணிகளைக் கூட பழைய மாணவர் சங்கமும் பெற்றோர்களும் இணைந்து வழங்குகின்ற நிதியினைக் கொண்டே வாங்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

மாணவர்களுடைய காலணிகள் பழுதடைந்தால் அதனைச் சேகரித்து சீர்படுத்தியும் வழங்கப்படுவதுண்டு. இதற்குப் பெற்றோர்களும் உதவி செய்கின்றார்கள்.




பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தன்னுடைய முழுமையான சரீர உழைப்பை மட்டுமே வழங்கி வருகின்றது. பொருளாதார ரீதியாக உதவக் கூடிய நிலைமை அபிவிருத்திச் சங்கத்திடம் இல்லை.

பழைய மாணவர் சங்கம் பூரணமான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. குறிப்பாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னாக பழைய மாணவர் தினத்தைக் கொண்டாடியதுடன் ''விழுதுகள்'' என்ற நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

கட்டாயக் கல்வித் திட்டத்தின்கீழ் இணைக்கப்படும் மாணவர்களுக்கு வேண்டிய வசதிகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றது. தொடர்ந்தும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அதிக சலுகைகள் அதிபர், ஆசிரியர்களினால் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தற்போது மாணவர்களின் கற்றலுக்காக கணனிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. நவீன கற்றல் திட்டத்தின்கீழ் கணனிக் கல்வியும் முக்கியம். அதனை நடைமுறைப்படுத்த கணனிகள் வேண்டும்.

உலக உணவுத்திட்டம்கூட நல்ல முறையில் பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்றது. மாணவர்களின் தேவைகருதி இந்தத் திட்டம் நல்ல முறையில் செயற்படுத்தப்படுவதினால் நூறு வீத பயன்பாட்டை மாணவர்கள் அனுபவிக்கிறார்கள். இது மாணவர்களின் கல்வியைத் தூண்டும் ஒரு விடயமாகவும் இருக்கின்றது என்றே குறிப்பிடலாம்.

**பவித்திரன்**



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கற்றல் உபகரணப் பொதியை சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.கந்தசாமி மாணவி ஒருவருக்கு வழங்குகிறார். (100)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சிரேஷ்ட மாணவத் தலைவனாகத் தெரிவுசெய்யப்பட்ட க.சுலக்சனுக்கு வித்தியாலயத்தின் அதிபர் து.கிருபாகரன் சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம். (325)



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையைச் சேர்ந்த குருளைச் சாரணர்களுக்குச் சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. [illegible] சாலை அதிபர் சிவகடாட்சம், பொறுப்பாசிரியர் விக்கினேஸ்வரி, [illegible] ஆசிரியர் அருட்பிரகாசம் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: நவாலிச் செய்தியாளர்)



சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். [illegible] அதிபர் செல்வி நா.ஜெயராணி உரையாற்றுவதையும் மாணவி ஒரு[illegible] விருந்தினராகக் கலந்துகொண்ட செல்வி வி.கந்தையா பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சங்கானைச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேற்றைய (04.08.2008) உதயனில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள் 01 இற்கான விடைகள்

**விடைக்குறிப்புகள், வினாத்தாள் - 01**

01-1, 02-3, 03-2, 04-2, 05-1, 06-3, 07-1, 08-3, 09-4, 10-3, 11-3, 12-அ (2, 7), ஆ(4,9,21), 13-1, 14-1, 15-3, 16-1, 17-அடர்ந்த, 18-திகில், 19-1, 20-2, 21-3, 22-2, 23-4, 24-3, 25-4, 26-(2,2), 27-(1,2), 28-3, 29-7, 30-4, 31-1, 32-2, 33-நம்பிக்கை, 34-3, 35-4, 36-4, 37-2, 38-தபால் அட்டையில் முத்திரை ஒட்டுவதில்லை, 39-தாமரை மலரல்ல கொடி, 40-4.

**வினாத்தாள் - II**

01. 1-குரங்கு, 2-ஆடி மகிழ்ந்தன, 3-கடுவன், 4-அலப்பும், 5-முகில்கள், 6-பொருத்தமான விடை, 7-நிலவு, 8- மேகங்கள்.... அருவிகள்....., 9-காலை, 10-ஆடி.

02. 1-அறிவு உண்டாதல், 2-நித்திரை செய்தல், 3-உதவி செய்தல், 4-வாக்கு மீறல்.

03. 1-பிழுக்கை, 2-முத்து, 3-குருளை, 4-தாள்.

04. 1-கிராமத்தின் மத்தியில் அச்சிறிய விளையாட்டு மைதானம் அமைந்திருந்தது.
2-பஸ்ட்டர் நுண்ணுயிர் தொடர்பான தமது ஆராய்ச்சியை மேலும் வளர்த்துக் கொண்டார்.

05. 1-கருணை, 2-செல்லமாக. 06. 1-குருவிகள், 2-புறா.

07. 1-கபுடா களு பாட்டய், 2-சீயய், 3-ஒபகே சப சனீப்பகொஹமத.

08. 1-Monkey, 2-Trees.

09. 1-வெளியே போவோம், 2-நடனம், 3-தயவு செய்து இங்கே வரவும்.

10. 1-2, 2-2, 3-4, 4-2, 5-3, 6-1, 7-4, 8-1, 9-2, 10-3, 11-2, 12-2, 13-4, 14-3, 15-1

11. 1-மஞ்சள், 2-இறுதி தீர்ப்பு, 3-அம்பக்கே தேவாலயம், 4-தேனீ, 5-29.

12. 1-தனு, 2-கடகம், 3-மகரம்.

13. 1-அந்தூரியம், 2-ஒகிட், 3-காசித்தும்பை, 4-லில்லி.

14. 1-அத்தாங்கு, 2-வீச்சு வலை, 3-கரப்பு.

15. 1-6 $cm^2$, 2-2ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 3-80/-, 4-140 நிமிடம், 5-ரு. 7.50, 6-பால் மா பேணி 7-▣, 8-1501,1502, 9-ரு. 202.50, 10-104, 11-295/-, 12-31/-, 13-227.50/-, 14-117.50/- 15-671/-,

16-பொருத்தமான கருத்துள்ள வசனம்.

## வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, ஓக.5

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த சொற்பொழிவு நிகழ்வு வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'வாராதிருக்க வழக் குண்டோ' என்னும் தலைப்பில் இளைப் பாறிய அதிபர் பண்டிதர் சி. வேலாயுதம் சொற்பொழிவாற்றுவார். இந்நிகழ்வு பேரவைத் தலைவர் எஸ். அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும். (203-236)

## மீசாலை வடக்கில் வீடமைப்புக்குத் தெரிவான பயனாளிகளுக்குப் படிவங்கள்

யாழ்ப்பாணம், ஓக.5

மீசாலை வடக்கு, இராமவில் கிராம அலுவலர் பிரிவில் மீள் எழுச்சித் திட்டத்தின் வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குப் புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்திற்கு அருகில் உள்ள இராமாவில் பிரிவு கிராம அலுவலரின் அலுவலகத்தில் படிவங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'அ', 'இ', 'உ' ஆகிய பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்போர் இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202-207)

## ஐ.தே.க. அலுவலகம் மீது அநுராதபுரத்தில் தாக்குதல்

அநுராதபுரம், ஓக 5

அநுராதபுரம் நகரப்பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட இணைப்பாளரது அலுவலகமும் அவருடைய மருந்தகமும் இனந்தெரியாதவர் களால் நேற்றுமுன்தினம் காலை தாக்கு தலுக்குள்ளானது. அதில் ஊழியர் ஒருவர் காயமடைந்தார்.

சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் எட்டுப்பேர் அடங்கிய குழு ஒன்றே வான் ஒன்றில் வந்து மருந்தகம் மீது தாக்குதல் நடத்தியதாக அப்பகுதி ஐக்கிய தேசிய கட்சி எம். பி. ரங்கபண்டார தெரிவித்தார். அதேவேளை, ராமநாயக பகுதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகமும் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தது என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 * 04 * 1935



உதிர்வு 02 * 08 * 2003

அமரர்
**இளையதம்பி பாலசிங்கம்**
(7 ஆம் வட்டாரம், மண்டைதீவு)

பா.சிறிபாதன் (மகன்),
197, பொற்பதி வீதி, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(76799)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சந்தாம்பிள்ளை சகாயசீலன்**
(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்- அரசியல் விஞ்ஞானத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தோற்றம் 22★06★1961
மறைவு 05★08★2007

அன்புள்ள அப்பாவே!
ஆண்டொன்று போனாலும்
ஆறாது எங்கள் மனது
நீங்காமல் என்றுமே
நிலைத்திருக்கும் உங்கள் நினைவு!

அன்னாரின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்தவும் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதற்கும் சுண்டிக்குளி பரி.திருமுழுக்குனர் யோவான் ஆலயத்தில் இன்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஜெப ஆராதனை நடைபெறும். இவ்வழிபாட்டில் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"ஆசிரியர் விடுதி"
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்

(சி/554015)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பிப்பிள்ளை காங்கேசு**

தோற்றம் 04.02.1938 மறைவு 28.07.2006

திதி:
சதுர்த்தி (05.08.2008)

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறாத் துயரில்
கண்ணீர் சொரிய நின்று எப்போதும்
உங்கள் நினைவால் வாடுகின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(76878)

## வீடு வாடகைக்கு

தாவடி வடக்கு வன்னிய சிங்கம் வீதியில் அமைதியான சூழலில் நான்கு அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:
மு.மாசிலாமணி, வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.
(76956)

## காணி விற்பனைக்கு

நவக்கிரி, நிலாவரைக்குச் சமீபமாக நன்னீர் வசதி உள்ள விவசாயம் செய்யக்கூடிய நல்ல காணி (நல்ல சூழலில்) 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
வீ.கோபாலதாஸ், நீலகிரி ஷொட்டல்,
நிலாவரை, நவக்கிரி. T.P.077 9123040
(76899)

## வீடு வாடகைக்கு

சுதுமலையில் கம்பஸ், Town என்பவற்றுக்கு அண்மையில் நன்னீர் வசதி கொண்ட கௌரவமான சூழலில் மேல்மாடி வீடு உத்தியோகத்தர் / படிக்கும் மாணவர் குடும்பத்துக்கு உடன் வாடகைக்குண்டு. இன்று (05.08.2008) நண்பகல் 12 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.
T.P.071 5643967, 071 5234379.

## மரண அறிவித்தல்

*மயிலன் நடராசா (நேவி நடராசா)*

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட



மயிலன் நடராசா (03.08.2008) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் (நேர்ஸ்) அன்புக் கணவரும், மல்லிகாதேவி, சிவராசா, (பகறின்), யோகராசா (பகறின்), யாதவராசா, தவனேஸ்வரி (வவுனியா), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வின் வீதி,
காரைநகர்.

(சி/554026)

தகவல்:
மனைவி.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 × 10 × 1939



மறைவு 01 × 08 × 2003

அமரர்
**சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**
(பங்குதாரர்: நியூ சோபிதா நகைமாளிகை)
திதி: 05.08.2008

கண்ணுள் மணிபோல் எமைக்காத்து
நாம் உயர எமக்கு வழிகாட்டி
எம்மை விட்டுப் பிரிந்ததேனோ எம் அப்பாவே!
என்றும் பிரார்த்திப்போம் ஆத்ம சாந்திக்காய்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"திருவோகம்"
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

**நியூ சோபிதா நகைமாடம்**
(184) 74/ 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு

**Bata** புதிய வரவுகள்

எம்மிடம் மாணவர், உத்தியோகத்தர், வாலிபர்,
இளம் பெண்கள், சிறு பிள்ளைகளுக்கான
அழகாக வடிவமைக்கப்பட்ட
சப்பாத்துக்கள், பிளற்போம் பாதணிகள், ஹீல்ஸ்,
லெதர் பாதணிகள், நவீன ரபர் பாட்டாக்கள்,
'ஆரோக்கிய' ரபர் பாட்டாக்கள்
என்பன உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**லக்ஷ்மி ஓகனைசேஷன்**
(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)
இல. 25, 4ஆம் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(எமது இடம் பிறவுண் வீதியில் உள்ள மின்சார நிலைய காரியாலயத்திற்கும், கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ளது)



(சி/554011)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர், கிளையில் 18+ சேமிப்புக் கணக்கினைப் பேணிய வாடிக்கையாளர் ஒருவருக்கு, ஒரு பவுண் தங்கக் காசினை அவரது திருமணப் பரிசாக வழங்குகின்றார்.




இலங்கை வங்கியில் 35 வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிய நெல்லியடி முகாமையாளர் வல்லிபுரம் தில்லைநாதனுக்கு நடைபெற்ற சேவைநலன் பாராட்டு விழாவிலே எடுக்கப்பட்ட படம்.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் விழா நாயகனுக்கு மலர்மாலை அணிவித்துக் கெளரவிப்பதையும் அருகில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.சிவரட்ணம் நிற்பதையும் படத்தில் காணலாம். *(218)*

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.5

கொக்குவில் மேற்கு சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியள வில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 14ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் இடம்பெறும். 15ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் 16ஆம் திகதி காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 14ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

15ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.5

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.5

சில்லாலை கதிரைமாதா ஆலயத்தின் திருவிழா நாளை புதன்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி மாலை நற்கருணை ஆராதனையுடன் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

மறுநாள் திருவிழாத் திருப்பலி இடம்பெறும். (203)

# சமூகச் சீரழிவை ஏற்படுத்தக்கூடிய இணையங்களைத் தடுக்கத் திட்டம்!

கொழும்பு,ஓக.5

சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தக்கூடிய இணையத்தளங்களுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் பிரியந்த காரியப்பெரும தெரிவித்திருப்பவை வருமாறு:

சமூக சீரழிவுகளைத் தூண்டக்கூடிய இணையத்தளங்களை இலங்கையில் பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இளைஞர்கள் இத்தகைய இணையத் தளங்கள் மூலம் அதிகமாகப் பாதிப்படைந்து விடுகிறார்கள். இதனைத் தடுப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை செயற்படுத்த எண்ணியுள்ளோம்.

இணையத்தள இணைப்புகளை வழங்கும் நிறுவனங்களுக்கு இது தொடர்பிலான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம் - என்றார். (சி)

## பண்.மகளிர் கல்லூரியில் விளையாட்டுப் பயிற்சி

சுன்னாகம்,ஓக.5

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் விளையாட்டுப் பயிற்சி முகாம் இடம்பெற்றது.

இப்பயிற்சி முகாமில் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், மெய்வன்மை விளையாட்டுகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகளும் பயிற்றுநர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயிற்சியினை வழங்கினர். (1-38)

# ஒலிம்பிக் நினைவுகள் 6

Beijing 2008

### 5ஆவது ஒலிம்பிக் (1912)

*ஐந்தாவது ஒலிம்பிக் போட்டி 1912இல் சுவீடன் நாட்டில் உள்ள ஸ்டொக்லோம் நகரில் மே 5 முதல் ஜூலை 22 ஆம் திகதி வரை நடைபெற்றது. அதில் 28 நாடுகளில் இருந்து 2407 வீரர்கள் பங்கேற்றனர். 14 விளையாட்டுக்களில் 102 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.*

*ஒலிம்பிக் சின்னத்தில் இடம்பெற்றுள்ள 5 வளையங்கள் 5கண்டங்களைக் குறிக்கின்றன. அதற்கேற்றாற்போல முதன்முறையாக இப்போட்டியில் 5 கண்டங்களிலும் இருந்தும் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். தொடக்க நிகழ்ச்சி மே5இல் நடைபெற்றாலும், போட்டிகள் அனைத்தும் முதன்முறையாக ஒரு மாதத்திற்குள் முடிக்கப்பட்டன.*

*போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த பிரான்சிஸ்கோ லாசரோ என்பவர் மரதன் ஓட்டத்தின் இடையே விழுந்து இறந்தார். போட்டியின்போது இறந்த முதல் வீரர் இவர்தான்.*

*கிளெய்ன், அசிகய்னென் ஆகியோர் இடையே நடந்த மல்யுத்தப்போட்டி 11 மணி 40 நிமிடங்கள் நீடித்தது. ஒலிம்பிக்கில் அதிக நேரம் நடைபெற்ற போட்டி இதுதான். இப்போட்டியில் கிளெய்ன் வென்றாலும் களைப்பின் காரணமாக அவரால் இறுதிச் சுற்றில் பங்கேற்க முடியவில்லை.*

*64 வயதில் சுவீடன் வீரர் ஆஸ்கர் ஸ்வான் மான் சுடுதல் போட்டியில் தங்கம் வென்றார். அதிக வயதில் பதக்கம் வென்றவர் (அந்தக் காலகட்டத்தில்) என்ற பெருமையை இவர் பெற்றார்.*

*இந்த ஒலிம்பிக்கில் முதன்முறையாக கலைப்பிரிவிலும் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தட களம் மற்றும் கலைப் போட்டி இரண்டிலும் பதக்கம் வென்ற ஒரே வீரர் என்ற பெருமையை அமெரிக்காவின் வால்டர் வினான்ஸ் பெற்றார். அவர் துப்பாக்கி சுடுவதில் வெள்ளியும், சிற்பக்கலையில் தங்கமும் வென்றார். கலைப்பிரிவில் போட்டிகள் 1948 வரை நடத்தப்பட்டன. 1916-ல் ஒலிம்பிக் இல்லை.*

*1916இல் ஜேர்மனியின் பேரிளின் நகரில் இடம்பெறவிருந்த 6ஆவது ஒலிம்பிக் போட்டிகள் முதல் உலகப் போர் காரணமாக நடைபெறவில்லை.*

### 7ஆவது ஒலிம்பிக் (1920)

*ஏழாவது ஒலிம்பிக் போட்டி 1920ஆம் ஆண்டு பெல்ஜியத்தின் அன்ட்வெர்ப் நகரில் நடைபெற்றது. 29 நாடுகளில் இருந்து 2,626 வீரர்கள் பங்கேற்றனர். 22 விளையாட்டுக்களில் 154 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. ஹங்கேரி, ஜேர்மனி, பல்கேரியா, துருக்கி, ஆகிய நாடுகள் பங்கேற்க அனுமதிக்கப்பட வில்லை.*

*இப்போட்டியில்தான் முதன்முறையாக ஒலிம்பிக் உறுதிமொழி ஏற்கப்பட்டது. சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன. ஒலிம்பிக் கொடியும் பறக்க விடப்பட்டது. அமெரிக்கா 41 தங்கம், 27 வெள்ளி, 27 வெண்கலப் பதக்கங்கள் வென்று பட்டியலில் முதலிடம் பிடித்தது.*

*72 வயது சுவீடன் வீரர் ஆஸ்கார் ஸ்வான் மான் சுடுதல் போட்டியில் தங்கம் வென்றார். அதிக வயதில் பதக்கம் வென்றவர் என்ற பெருமையை இவர் தக்கவைத்துக் கொண்டார்.*

### 8ஆவது ஒலிம்பிக் (1924)

*1924ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பரீஸில் நடைபெற்ற 8ஆவது ஒலிம்பிக் போட்டியில் 44 நாடுகள் பங்கேற்றன. மே 4ஆம் திகதி முதல் ஜூலை 27ஆம் திகதி வரை நடைபெற்ற போட்டிகளில் மொத்தம் 3,089 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.*

**இன்னும் 3 நாள்களே எஞ்சியுள்ளன......**

*குறுகிய தூர ஓட்டப் போட்டிகளில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க வீரர்கள் பதக்கங்களை தட்டிச் சென்றனர். நீண்டதூரப் போட்டிகளில் பின்லாந்து வீரர்கள் பாவோ நுர்மி மற்றும் வில்லே ரிடோலா ஆதிக்கம் செலுத்தினார். 1500 மீற்றர், 5000 மீற்றர் கிராஸ் கன்ட்ரி ஓட்டப் போட்டிகளில் நுர்மி பதக்கம் வென்றார். இந்த 2 போட்டிகளும் சில மணிநேர இடைவெளியில் நடந்தமை குறிப்பிடத்தக்கது. கிரான்ஸ் கன்ட்ரி போட்டி, வெயிலின் உக்கிரம் தீவிர மாக இருந்தபோது நடந்தது.*

*100 மீற்றர் மற்றும் 400 மீற்றர் போட்டிகளில் பிரிட்டிஷ் வீரர்கள் ஹாரோல்டு ஆபிரஹாம், எரிக்லிடெல் பதக்கம் வென்றனர். 1981இல் வெளியான 'சாரியட்ஸ் ஒவ் பயர்' என்ற திரைப்படம் இவர்கள் இருவரையும் முன்வைத்தே படமாக்கப்பட்டது.*

*இந்த ஒலிம்பிக் போட்டியில் தனி நாடு என்ற அந்தஸ்துடன் முதன்முறையாக அயர்லாந்து பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

### 9ஆவது ஒலிம்பிக் (1928)

*9ஆவது ஒலிம்பிக் போட்டி 1928ஆம் ஆண்டு நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் நடந்தது. இங்குதான் முதன் முறையாக ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. என்றாலும் 1936ஆம் ஆண்டு வரை ஜோதி ஓட்டம் பெறவில்லை. ஆம்ஸ்டர்டாமில் நடந்த போட்டியில் 46 நாடுகளிலிருந்து 2883 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். 15 விளையாட்டுக்களில் 109 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.*

*ஒலிம்பிக் பிறப்பிடமான கிரீஸ் நாடு, அணி வகுப்பில் முதல் வரத் தொடங்கியது இப்போட்டியில்தான். அது இன்றும் தொடர்கிறது.*

*பின்லாந்து வீரர் பாவோ நுர்மி, 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார். இது அவருக்கு 9ஆவது ஒலிம்பிக் தங்கமாக அமைந்தது. 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டங்களில் கனடா வீரர் பெர்சி வில்லியம்ஸ் தங்கம் வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். முதன் முறையாக ஹொக்கிப் போட்டியின் வாயிலாக இந்தியா இப்போட்டியில் தங்கம் வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.*

### தங்க மங்கை நாடியா

ஒலிம்பிக் போட்டிகளின் தங்க மங்கை என்று ஒருவரை அழைக்க வேண்டுமானால், ருமேனிய வீராங்கனை நாடியாவைத் தாராளமாக அழைக்கலாம். ஒலிம்பிக் போட்டிகளில் மட்டும் அவர் வென்ற தங்கங்களின் எண்ணிக்கை... ஐந்து!




1976 மொன்ட்ரீல் ஒலிம்பிக் போட்டிகளின் போது, 14 வயதுச் சிறுமியாக, ஜிம்னாஸ்டிக்ஸ் பிரிவில் அவர் அறிமுகமான போது, 'யாரோ சின்னப் பெண்...' என்று அவரை யாரும் அதிகம் கவனிக்கவில்லை.

ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக்ஸ் வரலாற்றில் முதன்முறையாக அந்தப் போட்டியில் நாடியா பல சாதனைகள் படைத்தார். தனிநபர் பிரிவில் [illegible] மேலும் ஒரு தங்கம் என, 1976 மொன்ட்ரீல் ஒலிம்பிக்கில் அவர் கைப்பற்றியது மூன்று தங்கப்பதக்கங்கள். நாடு திரும்பிய நாடியாவை ருமேனிய அரசு பிரமாதமாக வரவேற்றது.

அடுத்து, மொஸ்கோ ஒலிம்பிக் போட்டி. இம்முறை இரண்டு தங்கம், ஒரு வெள்ளி என்று பதக்கங்களை அள்ளிக் குவித்தார். ஒலிம்பிக் போட்டிகளில் அவர் பெற்ற தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்தது. 1981 உலக இளைஞர் போட்டிகளுடன் ஓய்வு பெற்றார் நாடியா.

ஐரோப்பிய நாடுகளில் எழுந்த கம்யூனிஸ்ட் எதிர்ப்பலை மற்றும் அரசியல் குழப்பங்கள் காரணமாக அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் புகுந்தார் நாடியா. அமெரிக்காவின் முன்னணி ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர் பார்ட் கானரை திருமணம் செய்து கொண்டார். கணவனும், மனைவியும் சேர்ந்து ஜிம்னாஸ்டிக்ஸ் கண்காட்சிகள் நிறைய நடத்தினார்கள். இந்தத் துறையில் நுழைய விரும்பும் இளம் வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்தார்கள்... அளிக்கிறார்கள்.

ஜிம்னாஸ்டிக்ஸ் என்றாலே... நாடியா என்ற பெயர் கல்வெட்டில் பொறித்த வார்த்தை போல பதிக்கப்பட்டு விட்டது. ஒலிம்பிக் போலவே, அந்தப் பெயரும், காலங்களைக் கடந்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர்

## க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்- ஒகஸ்ட், 2008

(புதிய விடயங்கள் விடைகளுடன்)

# பொருளியல்

திரு. வே.கருணாகரன்-BA(Hons) Dip.in.Ed. யாழ்.கனகரத்தினம் ம.ம.வி.

(01) *அறிவுசார் பொருளாதாரம்* (Knowledge Economy - KE) என்றால் என்ன?

*"ஒரு பொருளாதாரம் அதன் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் உயர்த்துவதற்கு அறிவை உருவாக்கி, பரவச் செய்து, பயன்படுத்துமாயின் அது அறிவுசார் பொருளாதாரம் எனப்படும்."*

* அறிவு ஒரு புதிய எண்ணக்கருவல்ல அது எப்பொழுதும் எந்தவொரு நாட்டினதும் அபிவருத்திச் செயன்முறைகளின் மையமாக இருந்துள்ளது. மிக அண்மைக்காலத்தில் அறிவு உருவாக்கம் அதன் பரவும் தன்மை என்பவற்றின் வேகம் அதிகரித்துள்ளதால் அது துரித பொருளாதார அபிவிருத்தியில் மேலும் முக்கியத்துவம் பெற்று வருகிறது.
* வெற்றிகரமான அறிவுப் பொருளாதாரத்தின் பண்புகளாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத துடன் நெருங்கிய தொடர்பு, பொருளாதார வளர்ச்சியிலும் போட்டித் தன்மையிலும் புதிய கணடு பிடிப்புக்களின் அதிகளவு முக்கியத்துவம், கல்வியின் முக்கியத்துவத்தில் அதிகரிப்பும், வாழ்நாள் கல்வியும், ஆராய்ச்சி அபிவிருத்தி (R&D) மென்பொருள் (software) கல்வி என்பவற்றில் அதிக முதலீடுகளும் விளங்கும்.
* அறிவுசார் பொருளாதாரம் *உயர் தொழில்நுட்ப கைத்தொழில்களைப் பற்றியதல்ல.* அறிவின் பிரயோகமானது முயற்சியாண்மை, கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் மக்களது கல்வி திறன்களின் மட்டம் என எல்லாப் பிரதேசங்களிலும் இடம் பெறுகிறது.

- அறிவுப் பொருளாதாரமானது உயர் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை (I.C.T) மட்டுமின்றி, அறிவை தமது உற்பத்தித்திறனை முன்னேற்றவும், நலனை (Welfare) அதிகரிக்கவும் பயன்படுத்துகிறது.

* அறிவுக்கும் வளர்ச்சிக்குமிடையே மிகப் பலமான தொடர்பிருப்பதை *அறிவுப் பொருளாதாரச் சுட்டெண்*_(KEI) காட்டி நிற்கின்றது.

அறிவுப் பொருளாதாரத்தின *நான்கு தூண்களாவன* (Four Pillars)

1. வணிகச் சூழல்
   -பொருளாதார மற்றும் நிறுவன ஆளுகையானது அறிவின் திறமையான . உருவாக்கம், பரவல், பயன்பாடு என்பவற்றுக்கு தூண்டுதலாக விளங்கும்.
2. சக்தி வாய்ந்த தகவல் உட்கட்டமைப்பு
   -அதி செயற்திறனான தொடர்பாடல், பரவல், தகவல் செய்முறைக்கு வசதியேற்படுத்த முடியும்.
3. மனித வளங்கள்
   - ஒரு கல்வி கற்ற திறன் படைத்த மக்கள் அறிவை உருவாக்கவும், பயன்படுத்தவும் முடியும்.
4. திறன்மிகு கண்டுபிடிப்பு முறைமை
   நிறுவனங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் வளர்ந்து வரும் உலகளாவிய அறிவையும் பெற்று உள்வாங்கி அதனை உள்நாட்டு தேவைகளுக்கேற்ப பொருத்தமான புதிய அறிவை உருவாக்க முடியும்.

* கடந்த சில தசாப்தங்களாக கொரியா, தாய்வான், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், போன்றன அறிவுக் காரணிகளில் கணிசமாக முதலிட்டதனால் உலகின் முன்னணி நாடுகளாக மாறியுள்ளன. இலங்கையும் கூட அறிவுப் பொருளாதாரம் நோக்கி நிலை மாறுவதற்கான சரியான காலம் இதுவாகும்.

(2.) "அறிவுசார் பொருளாதாரம்" *இலங்கைக்கு எவ்வாறு பொருத்தமான உபாயமாக* கொள்ள. முடியும்?

1.இலங்கை விவசாய துறைகளிலிருந்து சேவைத்துறைசார் பொருளாதாரமாக மாறியுள்ளமை.
2.தாராளமயமாக்கல், தனியார் துறைபங்கு பற்றல், நவீன மயப்படுத்தல், போட்டித் தன்மை அதிகரிப்பு என்பவற்றால் சேவைத்துறை விரிவுபட்டுள்ளமை.
3.இலங்கையின் தாராள பொருளாதாரமும், உயர் கல்வியறிவும் கரை கடந்த வெளிநாட்டு நிறுவனங்களை அறிவுப் பொருளாதாரமாக நிலைமாற்ற உதவுவதற்கு கவர முடியும்.

(3.) *முதன்மைப் பணவீக்கம்* (Headline Inflation) *மையப் பணவீக்கம்* (Core Inflation) என்பவற்றை வேறுபடுத்துக.

* கிடைக்கத்தக்கதாகவுள்ள விலைச்சுட்டெண்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்ற பணவீக்கம் முதன்மைப் பணவீக்கமாகும்.
* *முதன்மைப் பணவீக்கத்திலிருந்து குறுகியகால விலைத்தளம்பல்களினை நீக்குவதன் மூலம் அளவிடப்படுவது மையப் பணவீக்கம் (அல்லது உள்ளார்ந்த பணவீக்கம்) எனப்படும்.*
  - காலநிலைப் பாதிப்புக்களால் ஏற்படும் விவசாயப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கள், அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற விலைகளிலான அதிகரிப்புக்கள் போன்றவற்றை நீக்குவதன் மூலம் இதனை அளவிடலாம். (நாட்டுக்கு நாடு விலக்கும் விடயங்கள் வேறுபடும்)
* முதன்மைப் பணவீக்கமானது பாதகமான காலநிலை போன்ற நிலமைகளினால் எழுகின்ற அதிகமானதும், தற்காலிகமானதுமான தளம்பல்களுக்குட்பட்டது. நிரம்பல் அதிர்வுகளின் தாக்கமானது தற்காலிகமானதாக இருப்பதால் நாணயக் கொள்கை போன்ற கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளை முதன்மைப் பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கையாள்வது பொருத்தமற்றது. எனவே இதற்கு மொத்தக் கேள்வியின் மாற்றங்களின் விளைவாக எழுகின்ற மையப் பணவீக்கமே பொருத்தமானது.
  -மையப் பணவீக்க அளவீடு கேள்வியால் தூண்டப்பட்ட பணவீக்கத்தை அளவிடுவதற்கு மிகவும் பொருத்தமானது.

(4.) *புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்* (New Colombo Consumers' Price Index ) என்பதனால் கருதப்படுவது யாது?

* இது 2007 இல் தொகை மதிப்புப் புள்ளி விபரத்திணைக்களத்தால் அறிமுக ப்படுத்தப்பட்டது.
* 1953 இலிருந்து இலங்கையின் அதிகார பூர்வ நுகர்வோர் விலைச்சுட்டெண்ணான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு பதிலாக 2007 நவம்பரிலிருந்து அதிகார பூர்வ சுட்டெண்ணாக பயன்படுத்தப்படுகிறது.

- பணவீக்கத்திற்கான தனியொரு நியம அளவீட்டை வைத்திருக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்படும் ஐந்து பிரதேச விலைச்சுட்டெண்கள், மற்றும் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகியவற்றின் கணிப்பீடு நிறுத்தப்பட்டது. இது மாற்றமுறும் நுகர்வு முறையை உள் வாங்கும் விதத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும்.

* பழையதிலிருந்து புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பல்வேறு அம்சங்களில் வேறுபடுகிறது. அவையாவன.

| அடிப்படை அம்சம் | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு. (புதிய) |
|---|---|---|
| 1.அடிப்படைக்காலம் | காலம் கடந்தது: 1952 | மிக அண்மியது: 2002 |
| 2.பிரதிநிதித்துவ சனத்தொகை | வரையறுக்கப்பட்டது:தொழில் வகுப் | அதிக பங்கு: அனைத்து நகர |
| 3.புவியியற் பரப்பு | குறுகியது: கொழும்பு நகரம | விரிவானது:கொழும்பு மாவட்டம் |
| 4.பொருட் தொகுதி | குறைவு:5 வகை | அதிகம்: 12 வகை |
| 5.விலை சேகரிப்பு நிலையங்கள் | குறைவு: 07 | அதிகம்: 12 |
| 6.விடயங்களின் எண்ணிக்கை | குறைவு: 213 | அதிகம்: 334 |
| 7.நிறையிடல் | பழமையானது | தற்காலத்திற்கேற்றது |
| 8.மொத்தக் கூடைப் பெறுமதி (ரு) | குறைவு:202.24 | அதிகம்: 17996.38 |
| 9.உணவுக்கான நிறை | அதிகம்: 68 | குறைவு: 45 |
| 10.சில பிரதான செலவு விடயங் கள் திரவப் பெற்றோலிய வாயு, நீர், தொலைபேசி, தனியார் வகுப்புக் கட்டணங்கள், நுளம்புத்திர | உள்ளடக்கப்படவில்லை | உள்ளடக்கப்பட்டுள்ளது |

(5.) *உயர் பெறுமதி கொண்ட நாணயத்தாளுக்கான தேவை* அதிகரித்துள்ளமைக்கான காரணங்கள் யாவை?

1.விலைவாசி உயர்வுடன் கொடுக்கல் வாங்கல் பெறுமதி அதிகரித்துச் செல்லுதல்
2.தன்னியக்க கூற்றுப் பொறிகளுக்கு (ATM) எப்பொழுதும் உயர் பெறுமதி நாணயத் தாள்கள் தேவைப்பட்டமை
3.பின்தங்கிய பிரதேசங்களில் காசல்லாக் கொடுப்பனவு வசதிகளின் கிடைப்பனவு இல்லாமை
4.உயர் பெறுமதி நாணயத்தாள் அச்சிடல் மிகச் சிக்கனமாயிருத்தல்
5.உயர் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களில் கணக்கிடும் நேரத்தைச் சிக்கனப்படுத்தல்
6.உயர் பெறுமதியான நாணயத்தாளின் பாவனைக் காலம் உயர்வாகவிருத்தல்

(6.) *ஒதுக்குப் பணம்- மூலங்கள், பயன்பாடுகள் எவை?*

(அடிப்படைப்பணம் / உயர்வலுப்பணம் / நாணயத்தளம் ) (2007 இல்)

| மூலங்கள் | ரூபா பில் | பயன்பாடு | ரூபா பில் |
|---|---|---|---|
| 1 தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்<br>2. தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 293-<br>-29 | 1.சுற்றோட்டத்திலுள்ள நாணயம்<br>2.மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கி வைப்புக்கள்<br>3. அரச முகவர் வைப்புக்கள் | 173<br>91-<br>- |
| மொத்தம் | 264 | | 264 |

சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (C) = பொதுமக்களிடமுள்ள நாணயம் (CP) + வணிக வங்கிகளிடமுள்ள நாணயம் (CKB)

(7) *வெளிநாட்டு வர்த்தகப் போக்கு முக்கியம் பெறும் நாடுகள் எவை?*

| ஏற்றுமதியாகும் நாடுகள் | இறக்குமதியாகும் நாடுகள் |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | 1. இந்தியா |
| 2. ஐக்கிய இராச்சியம் | 2. சிங்கப்பூர |
| 3. இந்தியா | 3. சீனா |
| 4. ஜேர்மனி | 4. ஈரான |
| 5. பெல்ஜியம் | 5. கொங்கொங |
| 6. இத்தாலி | 6. ஜப்பான |
| 7. ருசியா | 7. ஐ.டெமிரேட்ஸ |
| 8. யப்பான | 8. மலேசியா |
| ஐரோப்பிய ஒன்றியம் 37% | ஆசியா 60% |
| ஐக்கிய அமெரிக்கா 29% | ஐரோப்பிய ஒன்றியம் 14% |
| ஆசியா 12% | ஐக்கிய அமெரிக்கா 2 % |

(8.) முன்னுரிமைகள் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம (Generalised system of preferences – GSP+ Scheme )· என்பதனால் கருதப்படுவது யாது?

* ஐரோப்பிய ஒன்றியத்தால் சிறந்த ஆளுகை, மனித உரிமைகள், சூழல் மற்றும் தொழிலாளர் நியமங்கள் தொடர்பில் 27 சர்வதேச விதிகளை அமுல்ப்படுத்தல் போன்றவற்றிற்காக இலங்கை போன்ற நாடுகளுக்கு வழங்கப்பட்ட ஒரு ஏற்றுமதிச் சலுகையாகும்.

-இது ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கொருமுறை மீளாய்வு செய்யப்படுகிறது.

* இதன் குறிக்கோள் : கைத்தொழிலுக்கான துணைப் பொருட்களை வழங்கும் பின்புலத்தினை ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய கைத்தொழில்களை உருவாக்குதல் என்பவற்றின் மூலம் விரைவான கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல்.
* இத்திட்டதின் மூலம் ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் இலங்கை வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்கக் கூடியதாக இருந்தது.
* இதன் நன்மைகள் குறுங்காலத் தன்மை கொண்டவை
* இது தவறான வள ஒதுக்கீட்டினை ஏற்படுத்தும்.

-வர்த்தக அனுகூலம் எப்போதும் ஒப்பீட்டு அனுகூலத்தில் (Comparative Advantage) தங்கியுள்ளது.
-தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) காரணமாக இன்று போட்டி அனுகூலம் (Competitive Advantage) வெளிநாட்டு வர்த்தகத்தைத் தீர்மானிக்கும் பிரதான காரணியாகியுள்ளது.
- எனவே உள்நாட்டு உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட வேண்டும்.

(9.) தென்னாசிய வர்த்தக மையமாக (South Asian Trading Hub) இலங்கையை அபவிருத்தி செய்வது தொடர்பில் அது பங்கு கொள்ளும் பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்புக்கள எவை?

இருபுடை:
1. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISLFTA)
2. பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSLFTA)

பல்புடை
3. தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
4. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)
5. பல்துறை வாரியான தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை (BIMST EC)
6. பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர கரையோர நாடுகளின் அமைப்பு (IORARC)

(10) பின்வரும் குழுக்கள் சுட்டி நிற்பது எவற்றை?

| | |
|---|---|
| குழு:- 7 (G-7) :<br>குழுகுழு:- 10 (G-10): | அபிவிருத்தியடைந்த நாடுகளின் குழு |
| குழு:- 15 (G-15) :<br>குழு:- 24 (G-24) :<br>குழு:- 77 (G-77) : | வளர்முக நாடுகளின் குழு<br>முக்கிய வளர்முக நாடுகளின் குழு (இலங்கை உட்பட)<br>வளர்முக நாடுகளினதும் மாறு நிலை நாடுகளினதும் குழு |

(11) *கேள்வி முகாமைத்துவம்* (Demand Management) என்பதனால் கருதப்படுவது யாது?

* " இறைக் கொள்கை, நாணயக் கொள்கை என்பவற்றைப் பயன்படுத்தி பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி மட்டத்தை ஒழுங்கு படுத்துவதன் மூலம் பேரினப் பொருளாதார இலக்குகளை அடைய முயற்சிப்பதே கேள்வி முகாமைத்துவமாகும்"
* மொத்தக் கேள்வியின் கூறுகளான நுகர்வு, முதலீடு, அரச செலவீடு, ஏற்றுமதி, இறக்குமதி C,I,G,X,M) போன்ற மாறிகளில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது.
* விரிவாக்க (நாணய மற்றும் இறைக்) கொள்கை மூலம் பொருளாதாரத்தினுள் கொள்வனவு சக்தியை உட்புகுத்துதல் (Inject) சுருக்கத்தாக்க கொள்கை மூலம் பொருளாதாரத்திலிருந்து கொள்வனவு சக்தியை வெளிப்பாய்ச்சுதல் (Withdraw) மூலம் மொத்தக் கேள்வியில் மாற்றம் மேற்கொள்ளப்படும்.

(12) பேரினப் பொருளியற் குறிக்கோள்களாக *உள்வாரிச் சமநிலை* (Internal Balance) *வெளிவாரிச் சமநிலை* (External Balance) என்பவற்றை வேறுபடுத்துக.?

***உள்வாரிச்சமநிலை***

இது பணவீக்கத்திற்கும் வேலையின்மைக்கும் இடையே பரஸ்பரவிட்டுக் கொடுப்பினைக் கருதும் · உள்நாட்டுப் பொருளாதாரத்தின் நோக்கம் குறைந்த பணவீக்கத்துடன் நிறை தொழில் மட்டத்தை அடைவதாகும்.

| உள்வாரிச் சமநிலை '! நிறைதொழில் மட்டம் + விலை உறுதிப்பாடு |
|---|

***வெளிவாரிச் சமநிலை***

இது சென்மதி நிலுவையில் (நடைமுறைக்கணக்கில்) உள்ளடக்கப்படும் உட்பாய்ச்சல் களுக்கும் வெளிப்பாய்ச்சல்களுக்கும் இடையிலான சமநிலையாகும். - இதன் நோக்கம் நாணய மாற்றுவீத உறுதிப்பாட்டை அடைவதாகும்.

| வெளிவாரிச் சமநிலை '! சென்மதி நிலுவை சமநிலை + நா.மா.வீத உறுதி |
|---|

(13) *பேணத்தகு அபிவிருத்தி* (நீடித்த/ நிலையான அபிவிருத்தி Sustainable Development) என்பதற்கு வரைவிலக்கணம் தருக?

" எதிர் கால சந்ததியினர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றலைத் தடைசெய்யாத வகையில் இன்றைய சந்ததியினர் தமது நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்"

(14) இலங்கையின் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகணைக் காட்டும் குறிகாட்டிகள் மூன்றினைக் குறிப்பிடுக

1) 2006 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்:
   - மேல் மாகாணம் 50%
   - ஏனைய எந்தவொரு மாகாணமும் 10% ஐ அடையவில்லை
2) தலாவருமானத்தில்
   - மேல்மாகாணம் ரூ. 225500
   - ஏனையவற்றில் ஆகக்கூடியது வடமேல் மாகாணம் மட்டும் ரூபா 103700 ஏனையவை அதைவிட குறைவு
3) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான பங்களிப்பிலும் கூட பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகள் மேல் மாகாணத்தில் மிக உயர்வாக விளங்கின.
   ஆனால் சமூகக் குறிகாட்டிகளில் (கல்வி, சுகாதார வசதிகள்) மாகாணங்களுக்கிடையில்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இன்று தவறிழைப்போருக்கு என்றோ ஒருநாள் தண்டனை

ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் தி.மகேஸ்வரன் கடந்த வருடம் இடம்பெற்ற - பாதுகாப்பு அமைச்சுக்கான - நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வைத்து பாதுகாப்பு உயரதிகாரிகளைப் பார்த்து ஓர் எச்சரிக்கையை விடுத்தார்.

நாட்டில் இடம்பெறும் ஆள்கடத்தல்கள், கப்பம் அறவிடல், சட்ட விரோதப் படுகொலைகளைக் கண்டித்து ஆவேசமாக உரையாற்றிய அவர், ஆட்சியிலிருப்பவர்களின் தூண்டுதலின் பேரில் பாதுகாப்பு உயரதிகாரிகள் இத்தகைய அரச பயங்கரவாதத்துக்குத் தொடர்ந்தும் துணை போவார்களானால் அடுத்த ஆட்சியில் கட்டாயம் அதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்ற அறிவுறுத்தலையே பகிரங்கமாக அவர் அன்று அங்கு வெளிப்படுத்தினார்.

ஆட்சிப் பீடத்தின் சட்டவிரோத செயற்பாடுகளுக்குத் துணைபோகும் அரச உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரை அடுத்த ஆட்சியில் காப்பாற்ற யாரும் இருக்க மாட்டார்கள் என்றும் -

அத்தகைய குற்றம் மற்றும் தவறு இழைக்கும் உயரதிகாரிகள் இப்போது ஆட்சியிலிருப்பவர்களைத் தாஜா செய்து, தங்களின் காரியங்களைத் தற்சமயத்துக்குப் பார்த்துக் கொண்டாலும் கூட, அடுத்த ஆட்சியில் - அந்த அதிகாரிகள் ஓய்வு பெற்று வீட்டுக்குச் சென்றிருந்தாலும் கூட - அவர்கள் இழைத்த தவறுகளுக்காகச் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் - வெளிப்படையாகக் கூறியிருந்தார் மகேஸ்வரன்.

தமிழர்களின் தேசியத்தைப் பிரதிபலித்து, அவர்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் நாடாளுமன்றுக்கு உள்ளேயும், வெளியேயும் துடிப்பாக - துணிச்சலாக - குரல் எழுப்பிய இளம் எம்.பியான மகேஸ்வரனின் சிம்மக்கர்ச்சனை, இத்தகைய எச்சரிக்கையை வெளிப்படுத்தியமைக்காகத்தான் நேரத்துடனேயே அதிகாரத்தின் அரூபக் கரங்களால் இப்படி அடக்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

ஆனால், அவர் எச்சரித்த விடயத்தை இலங்கையின் உயர்நீதிமன்றம் இபபோது ஒருதடவை நினைவூட்டியிருக்கின்றது. ஆட்சியாளர்களின் அராஜகங்களுக்கும், அட்டூழியங்களுக்கும், ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கும் துணைபோகும் அதிகாரிகளுக்கு ஒரு நல்ல சூடு கொடுத்து எச்சரித்திருக்கின்றது உயர்நீதிமன்றம்.

அவர் எந்தத் தரத்தில் இருந்த அதிகாரியாக இருந்தாலும் - ஜனாதிபதிக்கு நெருக்கமானவராக இருந்தாலும் கூட - ஆட்சித் துறையின் தவறுகளுக்கு - சட்ட விரோதச் செய்ற்பாடுகளுக்கு - ஒத்துழைத்துத் துணை போய் மெத்தனமாகவும் மிதப்பாகவும் நடந்து கொள்வாரானால், சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப இடமளிக்கப்படமாட்டாது என்பதை இலங்கை உயர்நீதிமன்றம் கோடி காட்டி உரைத்திருக்கின்றது.

இப்போதைய திறைசேரியின் செயலாளராக இருக்கும் பி.பி.ஜயசுந்தர தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நிர்வாகத்தில் முக்கிய பிரமுகர். ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமான விசுவாசியும் கூட.

இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிப்பீடத்திலும் இதே செல்வாக்குடனும் அதிகாரத்துடனும் இருந்தவர். பல உயர் பதவிகளை வகித்தவர்.

அரச உடைமைகளைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையில் பெரும் ஊழலுக்குத் துணை போனதன் மூலம் நாட்டுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தினார் என பி.பி.ஜயசுந்தர மீது குற்றம் கண்ட உயர்நீதிமன்றம் அதற்காக அவருக்கு ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன், அவர் மேற்கொண்ட - தனியார் மயப்படுத்துதல் தொடர்பான - பல உத்தரவுகளைச் செல்லுபடியற்றதாக்கியும் தீர்ப்பளித்திருக்கின்றது.

நாட்டின் சொத்தை இழக்கச் செய்யும் ஊழல் நடவடிக்கைக்குத் துணைபோன உயரதிகாரிக்கு உயர் நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டு ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதித்த பின்னரும் கூட, அவரை நாட்டின் மிக முக்கிய பதவிகளில் ஒன்றான திறைசேரிச் செயலாளர் அதிகாரத்தில் தொடர்ந்தும் வைத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"ஜயசுந்தர என்ன செய்வார்? பாவம்! அவர் அரசியல் தலைமையின் முடிவைச் செயற்படுத்தினார். அதற்காக அவரைத் தண்டிப்பதா?'' - என்ற சாரப்படத் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறி ஆதங்கப்பட்டுக் கொண்டாராம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் தவறுக்குத் துணைபோன குற்றத்துக்காக இன்று சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்திருக்கின்றார் இலங்கையின் பொருளாதார விடயங்களில் உச்சப் பதவிகளை வகிக்கின்ற பெருமைக்குரிய ஜயசுந்தர.

அதே கதி, இன்று பாதுகாப்பு விடயங்களில் கொடூரத்துக்கும், அரச பயங்கரவாதத்துக்கும், அடக்கு முறைக்கும், சட்டவிரோத செயற்பாடுகளுக்கும் துணைபோகும் உயரதிகாரிகளுக்கு நாளை ஏற்படும்.

அமரர் மகேஸ்வரன் உயிருடன் இருக்கும்போது கூறிய இந்த எச்சரிக்கை நடைமுறைக்கு வரும்போது இலங்கைத் தீவில் நீதிதேவதை தனது ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்தியிருப்பாள் என எதிர்பார்க்க முடியும்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்


ஆலய முன்வீதியில் அமைக்கப்பட்டுள்ள பந்தல்

நல்லூர்,ஓக.5

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 நாள்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 23ஆம் திகதி மாலை 5 மணிக்கு கார்த்திகைத் திருவிழாவும் 25ஆம் திகதி காலை 7 மணிக்கு சந்தான கோபாலர் திருவிழாவும் இடம்பெறும்.

25ஆம் திகதி மாலை 5 மணிக்கு கைலாச வாகனமும் 26ஆம் திகதி காலை 7 மணிக்கு கஜவல்லி மகாவல்லி உற்சவமும் மாலை 5 மணிக்கு வேல் விமானமும் இடம்பெறும.

27ஆம் திகதி காலை 7மணிக்குத் தண்டாயுதபாணி உற்சவமும் அன்று மாலை 5 மணிக்கு ஒருமுகத் திருவிழாவும் இடம்பெறும். 28ஆம் திகதி 23ஆம் திருவிழா. மாலை 5 மணிக்கு சப்பரம் இடம்பெறும்.

29ஆம் திகதி 24ஆம் திருவிழா. அன்று காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழா இடம்பெறும். ஆறுமுகப் பெருமான் வள்ளி தேவசேனா சமேதராகத் தேரில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். 30ஆம் திகதி சனிக்கிழமை 25ஆம் திருவிழா. காலை 7 மணிக்குத் தீர்த்தம் இடம்பெறும்.

31ஆம் திகதி பூங்காவனமும் முதலாம் திகதி வைரவர் சாந்தியும் இடம் பெறும்.

ஆலய வீதிகளில் திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-111-86)

## விவசாயிகள் சமாச நிர்வாகிகள் சமூக சேவை அமைச்சருடன் சந்திப்பு

மானிப்பாய்,ஓக.5

யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சமாச நிர்வாகிகளை சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா சந்திக்கவுள்ளார்.

நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சமாசம் பதிவுசெய்யப்படுவது தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கான ஆவணங்கள் உரிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு பதிவுசெய்யப்படும்.

இதேவேளை - குடாநாட்டு பெரும்பாக அலுவலகங்களில் நீண்ட பல வருடங்களாக நிலவும் வெற்றிடங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை, விவசாய விளைபொருள்களை தென் பகுதிக்கு அனுப்புவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (203-95)

## புலமைப்பரிசில் மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.5

நல்லூர் கோட்டமட்டத்தில் இருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைத் தயார் படுத்தும் முன்னோடிப்பரீட்சை எதிர் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. என்று கோட்டக்கல்விப்பணிப்பாளர் கே.வி. குணசேகரம் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் வினாப் பொதிகளை பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (203-302)

# நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு வீதித் தடைகள்குறித்த விவரங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.5

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் உள்ள வீதிகள் தடைகள் தொடர்பாக யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.

நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர் வரும் 31ஆம் திகதிவரை இந்த வீதிகள் மூடப்பட்டிருக்கும்.

குறிப்பிட்ட வீதித்தடைகள் பற்றிய அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்குமாறு வாகன சாரதிகளை மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ கேட்டுள்ளார்.

திருவிழாக் காலங்களின்போது மூடப்பட்டிருக்கும் வீதிகளின் விவரம் வருமாறு:

* அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் பகுதி,
* பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் பகுதி,
* செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் பகுதி ஆகியன மூடப் பட்டிருக்கும்.

பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தியூடாகச் செல்லுதல்.

பருத்தித்துறை வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வழியாக பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முத்திரைச் சந்திப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்பக்கமாக பருத்தித் துறை வீதி, கந்தர்மடச்சந்திக்கும் அப்பால் அரசடி வீதி, அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதி, செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால் வாகனங்களை நிறுத்தமுடியும். (203)

# மழையால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

மானிப்பாய்,ஓக.5

குடாநாட்டில் அண்மையில் பெய்த மழை காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

பாதிப்படைந்த விவசாயிகளின் விவரங்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரால் கோரப்பட்டுள்ளன.

கடும் மழையினால் பாதிக்கப்பட்ட வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் உள்ளிட்ட அனைத்துப் பிரதேசத்திலும் பாதிக்கப்பட்டவர்களுக்கே நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் யாழ்.அரச அதிபர் ஊடாகத் திரட்டப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-95)

## சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.5

யாழ்.சைவபரிபாலன சபையினரால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு குரு பூசை இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.5

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை விழா இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள், மாணவர்களின் பேச்சு, ஆசிரியர்களின் சொற்பொழிவு, புராண படனம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (203)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 22 | 06.08.2008 புதன்கிழமை |
| திதி: | பஞ்சமி பி.ப. 01.18 வரை |
| நட்சத்திரம் : | அத்தம் மு.இ.07.54வரை |
| சுபநேரம் : | 04.34 - 06.04 |
| ராகுகாலம் : | 12.04 - 01.34 |

# நாகை மாவட்டத்தில் 1,000 ஆண்டுகள் பழைமையான சிவன்கோயில் கண்டுபிடிப்பு

சென்னை, ஓக. 05

நாகை மாவட்டத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த சிவன்



கோயில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்இதுகுறித்தவிவரம்வருமாறு:-

நாகை மாவட்டம் தரங்கம்பாடி அருகே மேலமங்கைநல்லூரில் பழைமை வாய்ந்த கருங்கல் பிள்ளையார் கோயில் இடிந்து முட்புதர்கள் மண்டிக் கிடந்தது. தரங்கம்பாடி தொல்லியல் துறை காப்பாட்சியர் முத்துசாமி அங்கு சென்று ஒருவாரமாக ஆய்வு நடத்தினார்.

ஆய்வுக்குப் பின் செய்தியாளர்களிடம் முத்துசாமி கூறியவை வருமாறு:-

இப்பகுதியில் பெரிய சிவன் கோயில் இருந்தமை ஆய்வில் தெரியவந்துள்ளது. அதில் கல்வெட்டுகளும், சோழ கால சிற்பங்களும் கோயிலுக்குத் தெற்கே திருக்குளமும் வடக்கே அக்ரஹாரமும் இருந்துள்ளன. அக்ரஹாரமும் சிவன் கோயிலும் அழிந்து விட்டன.

இடிந்த கோயிலை 16 ஆம் நூற்றாண்டில் ஊரின் நடுவிலுள்ள ஊரணி குளத்தின் தெற்கே சிறிய அளவில் கட்டியுள்ளனர். அப்பணியும் முழுமை பெறவில்லை. இக்கோயில் கருவறையில் விநாயகர் சிலையுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் இக்கோயிலை பிள்ளையார் கோயில் என்றே கூறி வருகின்றனர்.

கோயில் சுவரில் மூன்று பக்கமும் சோழர் கால கல்வெட்டுகள் உள்ளன. இவை முதலாம் ராஜேந்திர சோழன் காலத்திலும் அவருக்குப் பின் ஆண்ட அரசர்காலத்திலும் வெட்டப்பட்டுள்ளன.

இக்கோயிலுக்கு சோழர்கள் நிலக் கொடையும், பொற்காசுகளும் தானம் அளித்த செய்தி கல்வெட்டிலுள்ளது. 10 ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர் காலத்தில் கட்டப்பட்ட பெரிய சிவன் கோயிலின்பெயர்தெரியவில்லை-என்றார்.

## செட்டிக்குளத்தில் ஆறு தமிழர்கள் கைது

வவுனியா மாவட்டம், செட்டிக் குளத்தில் உள்ள முதலியார்குளப் பகுதியில் நேற்றுக் காலை 6 தமிழர்கள் பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அந்தப் பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு ஒன்றின்போதே இந்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவிக்கின்றது.

இந்தச் சுற்றிவளைப்பின்போது அந்தப் பகுதியில் உள்ள 172 வீடுகள் சோதனைக்குள்ளாக்கப்பட்டதுடன், 980 பேர் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இதன்போது தமது ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்தத் தவறியவர்களே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் 'சுகமஞ்சரி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திருமதி சாந்தி சிவஞானசுந்தரத்திடம் சஞ்சிகையின் முதற்பிரதியை வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி வ.மதுமதி, மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி கே.சிவபாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம். *(படங்கள்: நம்பி)*

# உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களில் இடம்பெற்ற கணிதப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஒக.5

உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற கணித வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:

**உடுவில் கல்விக் கோட்டம்**

***தரம் 6:*** பு. சாரங்கா(உடுவில் மகளிர் கல்லூரி), ப. காண்டீபன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), எஸ். பிரணவன் (புன்னாலைக் கட்டுவன் அ.த.க.பாட சாலை)

***தரம் 7:*** சி. தேனுஜா(உடுவில் மகளிர் கல்லூரி), வி. தனோயன்(ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), நா. நவலக்சன் (இணுவில் மத்திய கல்லூரி)

***தரம் 8:*** தே. டக்ஸன், பா.பாலஜீவன் (இணுவில் மத்திய கல்லூரி), வி. திவாகரன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

***தரம் 9:*** கு. துஸ்யங்கா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), இ. அனுசன் (சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்), செ.சாலினி (உடுவில் மகளிர் கல்லூரி)

***தரம் 10:*** சா. இசைப்பிரியா(இணுவில் மத்திய கல்லூரி), ஆ. கலைவாணி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), த. சுயந்தன் (இணுவில் இந்துக் கல்லூரி).

***தரம் 11:*** ஜெ. தாட்சாயினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), இ.ஜனானி (உடுவில் மகளிர் கல்லூரி), க.நிரோஜன் (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

**தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்**

***தரம் 6:*** ஏ.ஐங்கரன் (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), க.கபிலன் (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), த. சாரங்கன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), பே.சுகேதன் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

***தரம் 7:*** கி.விஷ்ணுகா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), சி.தனுராஜ் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), செ.ரஜீஸ்ரன் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

***தரம் 8:*** கே. கௌசிகன் (தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி), ம. டக்ஸன் (மல்லாகம் மகா வித்தியாலயம்), தெ.ராகுலன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

***தரம் 9:*** தி. ஜீவிதா(தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), ஞா. கீர்த்தனன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), கே. சோபனா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி)

***தரம் 10:*** த.தர்சனா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), பா. நதீரா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ம. அஜந்தன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி)

***தரம் 11:*** இ. பகீரதன் (தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி), உ. பவித்திரா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), சி. ரமணிகரன்(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி). (202-86)

## கல்விச் சுடர்

***பொருளியல்.....*** *(08ஆம் பக்கத் தொடர்ச்சி)*

(15) 2005 இல் *இலங்கையின் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணின்* (HDI) பெறுமதி யாது? இதனை ஏனைய தென் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுக?

- 2005 இல் இலங்கையின் மனித அபிவிருத்திச் சுட்டெண் - 0.743
  177 நாடுகளில் 99 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது.
- எல்லாத் தென் ஆசிய நாடுகளுமே நடுத்தர மனித அபிவிருத்தி கொண்டவையாகும். இலங்கை அவற்றில் முதலிடம் வகிக்கின்றது.

| நிலை | நாடு | சுட்டெண் |
|---|---|---|
| 99 | இலங்கை | 0.743 |
| 100 | மாலைதீவுகள் | 0.741 |
| 128 | இந்தியா | 0.619 |
| 133 | பூட்டான் | 0.579 |
| 136 | பாகிஸ்தான் | 0.551 |
| 140 | பங்களாதேஷ் | 0.547 |
| 142 | நேபாளம் | 0.534 |

(16) 2005 இல் **உயர் மனித அபிவிருத்தி கொண்ட நாடுகள் 5 தருக?**

1. ஐஸ்லாந்து – 0.968
2. நோர்வே – 0.968
3. அவுஸ்திரேலியா – 0.962
4. கனடா – 0.959
5. அயர்லாந்து – 0.956

(கணிப்பீட்டிற்கு உட்படும் 177 நாடுகளில் மனித அபிவிருத்தியில் உயர்-70 நாடுகள், நடுத்தர-85 நாடுகள், தாழ்-22நாடுகள்)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்ய விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக.5

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி உட்பட ஜி.சீ.ஈ உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆங்கிலமொழி மூலக் கல்வியைப் பயின்றவர்கள் மற்றும் அரச பணிகளில் இருந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

## நவாலி மகா வித்தியாலய மைதானம் புனரமைப்பு

மானிப்பாய், ஒக.5

நவாலி மகா வித்தியாலய மைதானம் மீள்புனரமைப்பு செய்யப்படுகிறது.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் மேற்படி புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நவாலி மகா வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் தெரிவித்தார்.

கடந்த 100 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாது மைதானம் மாணவர் பாவிப்புக்கு உகந்ததாகக் காணப்படவில்லை.

இதனையடுத்து தற்போது குளங்களின் புனரமைப்புப் பணிகளின்போது அள்ளப்படும் மேலதிக மணல்மண்ணைப் பயன்படுத்தி நவாலி மகாவித்தியாலய மைதானத்தில் உள்ள பள்ளப் பகுதி நிரப்பப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக 100 டிராக்டர் மணல் இலவசமாகப் பறிக்கப்பட்டுள்ளது என்றும் - மேலதிகமாக 50 டிராக்டர் மணல்மண் பறிப்பதற்கு நவாலி விவசாயிகள் சம்மேளனப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும் அதிபர் இரா.வசந்தகுமார் தெரிவித்தார். (202-95)


**வேலை ஆள் தேவை**

கோழிப்பண்ணை ஒன்றுக்கு வேலை ஆள்கள் தேவை. பி.ப.3.00 - 5.00 மணிவரை நேரில் வரவும்.

உதயன் பாம்
இல. 05, இராமநாதன் ஒழுங்கை,
செம்மணிவீதி, நாயன்மார்கட்டு. (76960)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 23 . 11 . 1976

விண்ணுலகில் 05 . 08 . 2006



**அமரர் தியாகராசா ரதிசீலன்**

*ஈராண்டுகள் சென்றாலும் தீராது*
*உன் நினைவுகள்*
*எங்கள் நெஞ்சத்தில் மாறாத*
*உன் நினைவுகள்*
*பேசும் சொந்தம் பேசாமல் போனது ஏன்?*

*கோட்ஸ்,*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.* (76952)

*என்றும் உன் பிரிவால் தவிக்கும்:*
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

எனது குடும்பக்காட்டும் நிவாரணக்காட்டும் மீசாலை வடக்கு மணியம் மோட்டார் சையிக்கிள் திருத்தும் இடத்திற்கும் மீசாலை பழைய பஸ் நிலையத்துக்கும் ( டச்சு றோட்) இடையில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மணியம் கராஜ்ஜில் அல்லது மீசாலை கண்டி றோட்டில் இருக்கும் முருகன் ஸ்ரோரில் (வவா கடை) கொடுத்து உதவும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும்.

திரு.கு.சிவானந்தம் (அதிபர்)
C/O, ச.விநாசித்தம்பி,
(சி/554031) *மீசாலை வடக்கு, கொடிகாமம்.*


**IBMS இன் கணனிக்கற்கை நெறிகள்**

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

ஆரம்பம்:- 08/08/2008, 09/08/2008

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி
**ஜெயக்குமாரி சந்திரராயு**



மலர்வு 04.12.1950

உதிர்வு 06.07.2008

**அன்பாக எமைப் பேணி வளர்த்தீர்கள்**
**ஆதரவாய் இருந்து காத்தீர்கள்**
**பாசத்தை உணவுடன் சேர்த்தூட்டி**
**பார்போற்ற எமை ஆளாக்கினீர்கள்**
**எத்துன்பம் நோய் வந்தபோதும் எதிர்த்து**
**நின்று மகிழ்வுடனே வாழ்ந்தீர்கள்**
**சின்னம்மா உங்களை நாம்**
**தொழுகின்றோம் உங்கள் நினைவை**
**என்றும் மறவோம்.**

*அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வு, மற்றும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*தகவல்*

*ஞானவைரவர் கோயில் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

மகள்மார், மகன், தம்பிமார், மைத்துனன், மைத்துனிமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீஜிங் ஒலிம்பிக் தொடக்க நிகழ்வை அச்சுறுத்தும் மழையும் சூறாவளியும்

பீஜிங், ஒகஸ்ட் 05

பீஜிங் ஒலிம்பிக் போட்டியை பிரமாண்டமான முறையில் நடத்திக்காட்ட அமைப்புக் குழுவினர் முனைந்துள்ள நிலையில், இயற்கையின் சீற்றம் அவர்களது திட்டத்தை சீர்குலைக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மழை, இடி, சூறாவளி ஆகியன போட்டி நடைபெறும் நாட்களில் இருக்கலாம் என உள்ளூர்வானிலை ஆய்வுமையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் பீஜிங் போட்டி அமைப்பு குழுவினர் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

29ஆவது ஒலிம்பிக் போட்டி பீஜிங் நகரில் எதிர்வரும் 8ஆம் திகதிமுதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. போட்டிக்கான தொடக்க நிகழ்ச்சியை, உலகம் பாராட்டும் விதமாக நடத்திக்காட்ட அமைப்புக் குழு ஏற்பாடுகளை செய்துள்ளது.

10 ஆயிரம் கலைஞர்கள் தொடக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்று, பல்வேறு சிறப்புகளை வெளிப்படுத்தவுள்ளனர். அது தவிர, மிகப்பெரியளவான வாணவேடிக்கைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பீஜிங் வானிலை ஆய்வு மைய அதிகாரி வேங் ஜியான்சி கூறியுள்ளவை வருமாறு:-

ஒலிம்பிக் தொடக்க நிகழ்ச்சிகள் நடைபெறும் நாளன்று வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இடியுடன் கூடிய மழைத்தூறல் இருக்கலாம். அதே சமயம் தொடக்க நிகழ்ச்சிக்கு முன்னரும் அதைத் தொடர்ந்தும் கனமழை இருக்காது. எப்போது மழை வரும், இடிஇடிக்கும், சூறாவளிவீசும் என்று எதையும் நிச்சயமாகக் கூறமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே தொடக்க நிகழ்ச்சியின் போது இரசாயனப் பொருள்களை கொண்டு மழையைத் தடுக் கும் தொழில்நுட்பத்தை மேற் கொள்ளப்படலாம் என்ற பேச்சு வலுத்துள்ளது.

ஆனால், அத்திட்டம் பரீட்சார்த்த நிலையிலேயே உள்ளதாக பீஜிங்கிலுள்ள செயற்கை மாற்று அமைப்பு மாநில அதிகாரி ஜாங்கியாங் தெரிவித்துள்ளார்.

சிறு மேகக் கூட்டத்தை சமாளிக்கும் வகையிலே இரசாயனப் பொருள்களைக் கொண்டு மேகத்தை தடுக்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும். அது மாதிரியான சூழல் இருந்தால் சில பகுதிகளில் அத்திட்டத்தை செயற்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



பீஜிங்கில் பிரதான போட்டிகள் நடைபெறவுள்ள 'நஷனல் ஸ்டேடியம்' இது. வானிலிருந்து சீன இராணுவதினர் இப் படத்தை எடுத்துள்ளனர்.

## சோமாலியாவில் குண்டுத்தாக்குதல் பெண்கள் உட்பட 20 பேர் மரணம்

மொடிஷ்ஷூ, ஒகஸ்ட் 05

சோமாலியத் தலைநகரான மொகடிஷ்ஷூவில் இடம் பெற்ற வீதியோரக் குண்டு வெடிப்பில், 20 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் வீதி சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்களாவர் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

## மீனவர்கள் பிரச்சினை பற்றி இலங்கையுடன் நடத்திய பேச்சில் இந்தியாவுக்கு வெற்றியாம்

### கச்சதீவில் சுதந்திரமாக மீன்பிடிக்கலாம் என்கிறார் தமிழகக் காங். தலைவர்

சேலம், ஒகஸ்ட் 05

கச்சதீவுக் கடல் எல்லைப் பகுதியில் தமிழக மீனவர்கள் பாதுகாப்பாகச் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அதற்காக மத்திய அரசு, இலங்கை அரசுடன் பேசி மேற்கொண்ட முயற்யில் வெற்றி கிடைத்துள்ளது என்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமிழகக் காங்கிரஸ் தலைவராகப் பொறுப் பேற்ற பின் தங்கபாலு எம்.பி. முதல் முறையாக நேற்று முன்தினம் சேலம் சென்றார்.

அங்கு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியவை வருமாறு:-

தமிழகக் கடல் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையின ரால் சுட்டுக் கொல்லப்படும் சம்பவம் குறித்து, பிரதமரின் கவனத் துக்குக் கொண்டு சென்று அதில் உறுதியான நடவடிக்கை எடுத்து மீனவர்களைக் காப்பாற்றக் கோரிக்கை வைத்தேன். பின்னர் தமிழ் நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் உள்பட அனைத்து எம்.பி.க்களும் பிரதமரைச் சந்தித்து வலியுறுத்தினோம்.

முதலமைச்சர் கருணாநிதி டில்லி சென்றபோது, பிரதமரிடம் இதுபற்றிப் பேசி தமிழக மீனவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தார். அப்போது பிரதமர் மன்மோகன் சிங், இலங்கையில் நடைபெறும் சார்க் மாநாட்டில் பங்கேற்கச் செல்லும்போது இதுகுறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்தவுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி ளித்தார்.

பிரதமர் நமக்கு அளித்த உறுதிமொழியின்படி, தற்போது, பிரதமரும், அவருடன் சென்ற அதிகாரிகள் குழுவினரும் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதில் நமக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி கிடைத்துள்ளது. தமிழக மீனவர்கள் கடலில் பாதுகாப்பாக மீன் பிடிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் மட்டுமல்லாமல் கச்சதீவுக் கடல் பகுதியிலும் சென்று மீன்பிடிக்க அனுமதி பெறுவதில் மத்திய அரசு வெற்றி பெற்றுள்ளது. அதற்காக அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கவுள்ளதாகவும் எனக்கு இப்போது தகவல்கள் கிடைத்துள்ளன- என்றார்.

## புலிகளின் முக்கிய பிரமுகர் இராமேஸ்வரத்தில் கைது

ராமநாதபுரம், ஒக.05

மதுரையில் தங்கியிருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பொருள்களை கடத்த உதவி செய்தார் எனக் கருதப்படும் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவைச் சேர்ந்த முக்கிய பிரமுகரான நிக்சன் (வயது-22) என்பவரை 'கியூ' பிரிவு காவல்துறையினர் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். இவர் மதுரை உச்சம்பட்டி அகதிகள் முகாமில் தங்கியிருந்தார். இவர் போர்ப் பயிற்சியும் பெற்றவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் மதுரை, திருச்சி, புதுச்சேரி போன்ற இடங்களில் விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பொருள்களை வாங்கி கடல் மார்க்கமாக இலங்கைக்கு, ராமநாதபுரத்திலுள்ள ஒரு முக்கியப் பிரமுகர் மூலமாக கடத்துவதற்குக் காரணமாக இருந்துள்ளார்.

இவரது அண்ணன் விஜயநீதிதன் கடந்த 4 தினங்களுக்கு முன் ராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் இலங்கைக்குப் பொருள்களைக் கடத்தியதாகக் கைது செய்யப்பட்ட 4 பேரில் ஒருவர் எனவும் தெரியவந்துள்ளது.

## காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளராக மன்மோகன் சிங்கே நிறுத்தப்படுவார்

புதுடில்லி, ஒக. 05

எதிர்வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் பிரதம வேட்பாளராக மன்மோகன் சிங்கே நிறுத்தப்படுவார் எனக் காங்கிரஸ் கட்சி உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இத்தகவலை அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி தெரிவித்துள்ளார்.

பா.ஜ.கவின் பிரதம வேட்பாளராக எல்.கே. அத்வானியை அக்கட்சி அறிவித்தது. அத்துடன் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதல் கட்டப் பட்டியலையும் வெளியிட்டது.

இந்நிலையில், பிரதமர் வேட்பாளருக்கு ராகுல் காந்தி தகுதியானவர் என்று மூத்த அமைச்சர் அர்ஜூன் சிங் உள்ளிட்ட சிலர் தெரிவித்த கருத்து, கட்சி வட்டாரத்தில் சிறிது சலசலப்பை ஏற்படுத்தி பின்னர் ஒரு வழியாக அடங்கியது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சிகள், பொதுத் தேர்தலில் உ. பி. முதல்வர் மாயாவதியை பிரதமர் வேட்பாளராக ஆதரிக்க முடிவு செய்துள்ளன.

இந்நிலையில் தற்போது பிரதமராக வுள்ள மன்மோகன் சிங்கே எதிர்வரும் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக இருப்பார் என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் பதவிக்கு மற்றொரு வேட்பாளரை நிறுத்தும் உத்தேசம் இல்லை அது தொடர்பாக எவரும் விண்ணப்பிக்கவும் இல்லை. அதற்கான சூழ்நிலையும் எழவில்லை - என்று சிங்வி கூறினார்.

இந்தியா- அமெரிக்கா இடையிலான அணு ஆயுத ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதால் பிரதமர் மன்மோகன் சிங்கே தற்போதைக்கு மிகச் சிறந்த தலைவராக விளங்குகிறார். எனவே, அடுத்த தேர்தலும் அவரே பிரதமருக்கான வேட்பாளராக இருப்பார் எனப் பெயர் தெரிவிக்க விரும்பாத மூத்த மத்திய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

## 8 மீனவர்கள் கரை திரும்பாததால் இராமேஸ்வரத்தில் பெரும் பதற்றம்

### இலங்கைக் கடற்படை பிடித்துச் சென்றதா எனச் சந்தேகம்

ராமேஸ்வரம், ஒக. 05

ராமேஸ்வரம் கடல் பகுதியில் 2 விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 8 மீனவர்கள் நேற்றுவரை கரை திரும்பவில்லை.இதுகுறித்து மீன்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது குறித்து தெரிவிக்கப்படுபவை வருமாறு:-

ராமேஸ்வரத்திலிருந்து கடந்த சனிக்கிழமை காலை 719 விசைப்படகுகளில் ஏராளமான மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் நேற்றுமுன் தினம் அதிகாலையில் கரை திரும்பினர்.

ஆனால், பத்மாவதி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் சென்ற மீனவர்கள் கருப்புச்சாமி, முருகேசன், பூமி ஆகிய 3 பேர் மற்றும் தமிழரசு என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் சென்ற கணபதி, ராடநாதன், ராஜேந்திரன், செல்வம் , சுடலைமாடன் ஆகிய 5 பேர் என மொத்தம் 8 மீனவர்கள் நேற்று இரவு வரை கரைக்குத் திரும்பவில்லை.

அவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றனரா, படகு பழுதாகி கடலில் தவிக்கின்றனரா அல்லது காற்று வேகத்தில் படகு திசைமாறிச் சென்றுள்ளனரா என்பது குறித்து மீன் துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று கடந்த சனிக்கிழமை தான் இலங்கை வானொலியில் அரசு அறிவித்தது. இந்நிலையில் மீனவர்கள் மாயமாகியிருப்பதால் ராமேஸ்வரம் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

## ஆயுதக்குழு அதிரடித் தாக்குதல் சீனாவில் 16 பொலிஸார் பலி!

பீஜிங், ஒகஸ்ட் 05

சீனாவிலுள்ள முஸ்லிம் பிராந்தியமான ஜின்ஷியாங் எல்லைக் காவலரண் இனந் தெரியாத ஆயுததாரிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 16 பொலிஸார் கொல்லப் பட்டனர் என்று பிராந்திய பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இக்காவலரண் காசி என்னுமிடத்தில் அமைந்துள்ளது. ஆயுததாரிகள் வாகனமொன்றில் வந்து இறங்கி திடீர் தாக்குதலை மேற்கொண்டார்கள். இதில் 16 பொலிஸார் கொல்லப்பட்டனர். பொலிஸார் பதில் தாக்குதலை ஆரம்பித்ததும் ஆயுததாரிகள் பின்வாங்கி வாகனத்தில் ஏறி பறந்து விட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தப்பியோடுவதற்கு முன்னர் ஆயுததாரிகள் இரு எறிகுண்டுகளையும் வீசினார்கள். இவற்றில் மற்றும் 18 பொலிஸார் காயமடைந்தனர். இவர்கள் எல்லை ரோந்து பணியில் ஈடுபடும் ஆயுதப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்களாவர் என்றும் அவர் விவரித்தார்.

சீனாவில் உள்ள ஜின் ஷியாங் பிராந்தியத்தில் பெருந்தொகையினராக வாழும் முஸ்லிம்கள் துருக்கிய வழித் தோன்றல்களாவர். சீன அரசால் தாங்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என இவர்கள் குரலெழுப்பி வருகிறார்கள். அத்துடன் சுயாதிபத்திய கோரிக்கையை முன்வைத்து அவ்வப்போது ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இப்பிராந்தியத்தில் சமீப காலமாக குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இவற்றில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். பிராந்திய இஸ்லாமிய தீவிரவாதக் குழு இவற்றுக்கு உரிமை கோரியுள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டுகளின் போது தொடர் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் இத்தீவிரவாதக் குழு அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பொலிஸார் அண்மையில் மேற்கொண்ட திடீர் தேடுதல் வேட்டையின் போது இந்த அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# பேராதனைப் பல்கலை தமிழ் மாணவன் கைது

## வேறொருவருக்குச் சொந்தமான "12 சிம் காட்டுகள்" வைத்திருந்தாராம்

கொழும்பு, ஓக.5

கண்டி, பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீட இறுதி வருட தமிழ் மாணவன் ஒருவர் சந்தேகத்தின்பேரில் நேற்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்றும் - விடுதலைப்புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துள்ளார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவனிடம் இருந்து கைத்தொலைபேசிக்கான 12 சிம் கார்ட்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்த சிம் கார்ட்டுகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானவை என்றும் -

கண்டி நகரில் புலி உறுப்பினர்களுக்கு இவர் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வந்தார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார், அவரிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மெற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

# மீண்டும் ஒருமுறை மேர்வின் சில்வா ஊடகவியலாளர்களுடன் கலாட்டா

## 'சிரச' படப்பிடிப்பாளர் மீது தாக்குதல்

கொழும்பு, ஓக. 05

களனியில் நேற்று இடம்பெற்ற ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே ஞாபகார்த்த மேம்பாலத்திறப்பு விழா நிகழ்வை வீடியோ படம் பிடிக்கச் சென்ற எம்.ரி.வி, சிரச ஊடகவியலாளர்கள் மீது அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடியாள்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்களை [illegible]தாக்கியவர்கள் ஊடகவியலாளர்களி[illegible] வீடியோ படப்பிடிப்புக் கருவிகள் இரண்டையும் பறித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரின் முன்னிலையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் இத்தாக்குதலைத் தடுக்கப் பொலிஸார் எந்தவித நடவடிக் கையையும் எடுக்கவில்லை என்றும் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வுக்குச் சென்ற ஊடகவியலாளர்களிடம் நெருங்கிய மேர்வின் சில்வா 'சிரச' தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றார்.

தாம் அரசால் முறைப்படி அழைக்கப்பட்டே இந்நிகழ்வுக்கு வந்திருக்கிறோம் என்று அந்த ஊடகவியலாளர்கள் மேர்வின் சில்வாவிடம் கூறியபோதும் மேர்வின் சில்வா அவர்களை வீடியோப் படம் பிடிக்கவிடாமல் தடுத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அங்கு வந்த மேர்வின் சில்வாவின் பாதுகாவலர்கள் பொலிஸார் முன்னிலையில் இந்த ஊடகவியலாளர்களைத் தாக்கிவிட்டு படப்பிடிப்புக் கருவிகள் இரண்டையும் பறித்துச் சென்றனர் என்றும் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (சி)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சார்க்' மாநாட்டினால் பொதுமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ் பேசும் மக்களே கடும் பாதிப்புக்குள்ளாகி இருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**சார்க் பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது கெடுபிடி**

சார்க் மாநாடு குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே கொழும்பில் தமிழர்கள் கடத்தல் மற்றும் கைதுகளினால் துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் 'சார்க்' பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் மோசமான கெடுபிடிகளைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருந்தனர்.

கொழும்பு, கொம்பனித்தெருவில் அண்மையில் 'சார்க்' பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் பொலிஸாரினால் குடியெழுப்பப்பட்டு - அவர்களின் வாழ்விடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. அந்த மக்களின் பிரச்சினை இன்னமும் முடிவுறாத நிலையிலேயே உள்ளது.

'சார்க்'மாநாட்டின் கூட்டுப் பிரகடனத்தில் சார்க் வலய நாடுகளில் பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதை 'சார்க்' உச்சி மாநாட்டுக்கு வருகைதந்த ஏழு நாடுகளின் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

'பயங்கரவாதம்' என்று சொல்லும் போது இங்கு அரச பயங்கரவாதத்தையே தெட்டத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது.

எனவே, நடந்துமுடிந்த இந்த சார்க் மாநாட்டினால் நாட்டுக்கு எந்த விதத்திலும் எதுவித பிரயோசனமும் ஏற்படவில்லை. ஏற்படப்போவதுமில்லை. மாறாக இந்த மாநாட்டினால் பொதுமக்களே கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் - என்றார். (சி)

B.A, Part I, II [யாழ்.,பேராதனை]
துரித மீட்டல் வகுப்புக்கள்
GAQ (யாழ்)-தொடர் கருத்தரங்கு
(அனைத்துப் பாடங்களும்)
ஆரம்பம்-06.08.2008-புதன்-9.AM
மேலதிக நேர அட்டவணையை
அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்
திகழ் கல்வி நிறுவனம்,
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
ஐடியல்-கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
அருகாமை-மானிப்பாய்.

A/L - 2009,2010
அரசியல்-T. [illegible]முருகன்
அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்புகள்
* ஒப்பீட்டு அரசியல்
* இலங்கை அரசியல்-பகுதி-II
* அரசியல் கோட்பாடு (M.CQ கட்டுரை வினா)
ஆரம்பம்-06.08.2008, 7.00 a.m
ஐடியல்-ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.
எழுது வினைஞர், கீழ்வகுப்புகளுக்கு தமிழ்,ஆங்கில மொழிமூலம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. 05.08.08 பி.ப. 3.00-5.00 க்கு இடையில் நேரில் வரவும்

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர் எனவும் , இந்த தாக்குதலின் போது 4 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இரணைதீவு பகுதியில் ஆள் நடமாட்டத்தை அவதானித்த கடற்படையின் துரித நடவடிக்கைப் படகு அணியினரும், விசேட படகு அணியினரும் அந்தத் தீவுக்குச் சென்று, அங்கு அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமை அழித்துள்ளதுடன், விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகளையும் கைப்பற்றினர் எனவும் கூறப்பட்டது.

## தனக்கிளப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்கள் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்டனர். இச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

நாகர் கோயில் பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை மிதி வெடியில் சிக்கி படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் படைத் தரப்பில் கூறப்பட்டது.

இதே வேளை தனங்கிளப்புப் பகுதியில் சிப்பாய் ஒருவரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் கரை ஒதுங்கியது. அதனைக் சாவகச்சேரி பொலிசார் மீட்டனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிவானுக்கு அறிக்கை ஒன்றை நேற்றுச் சமர்ப்பித்தனர். (அ-1-207)

வெளிவந்து விற்பனையாகின்றது
* தரம்-05மாணவர்களுக்கான-2008 ஓகஸ்ட் புலமைப் பரிசில் பரீட்சையை எதிர் நோக்கிய முன்னோடி எதிர் பார்ப்பு வினா விடைகள்-10 பகுதி I,II
ஆக்கம்:- புண்ணியாமீன், மஸீதா புண்ணியாமீன் (கண்டி)
விலை-120/=
* புலமைப் பரிசில் கல்வித் கருத்தரங்கு- 2008 27.07. 2008, 03.08.2008 கண்டியில் நடத்தப்பட்டது.
ஆக்கம்-புண்ணியாமீன், மஸீதா புண்ணியமீன் (கண்டி)
விலை-100/=
பாடசாலை ஊடாக பெற்றுக் கொள்பவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் விலைக்கழிவு உண்டு.
உடன் தொடர்பு 222 9881
அன்னை புத்தகசாலை,
இல 7, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறி அழைத்துச் சென்றனர் என்றும் -

நேற்றுக் காலை அவரது வீட்டிற்கு சற்றுத் தொலைவில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் அவர் சடலமாக வீசப்பட்டிருந்தார் என்றும் - குடும்பத்தினர் தெரிவித்தினர்.

உயிரிழந்த நபரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

## யாழ்.செயலகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கையில் வந்திறங்கிய படையினரும், பொலீஸாரும் செயலகத்தை சுற்றி வளைத்து பெரும் எடுப்பில் தேடுதல் நடத்தினர்.

அரச அதிபரின் பிரதான அறை உட்பட சகல அலுவலகப் பிரிவுகளிலும் மற்றும் செயலக வளாகத்திலும் ஒரு மணி நேரத்துக்கு மேலாகப் படையினரின் தீவிர சோதனை நடை பெற்றது.

குண்டு வைக்கப்பட்டிருப்பதான அநாமதேயத் தொலைபேசி அழைப்பு பிற்பகல் சுமார் மூன்று மணியளவில் வந்ததாகவும் அவ்வேளை தூர இடங்களில்இருந்து பணிக்கு வரும் பெரும்பாலானோர் அங்கிருக்கவில்லை என்றும், குண்டுப்புரளி விடயம் படையினர் செயலகத்துக்கு வந்து சேர்ந்த பின்னரே பலருக்குத் தெரியவந்தது என்றும் அறியக் கிடைத்தது.

தேடுதல் நடத்திய படையினர் குண்டு எதுவும் இல்லை என உறுதிப்படுத்தியதை அடுத்து பதற்றம் தணிந்தது.(அ-1-149)

## கைத்தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான சுற்றறிக்கை கடந்த மாதம் 20ஆம் திகதி வெளியிடப்பட்டது என்றும் அந்த சுற்றறிக்கையின் அடிப் படையிலேயே இந்த வரிவிதிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் சி.எவ்.எல். (CFL) அல்லாதமின்குமிழ்களின் பாவனைக்கு மூன்று வீத வரி விதிக்கப்படுகின்றது.

இதன் மூலம் மின்சாரத்தைக் குறைந்தளவு உள்வாங்கும் சி.எவ்.எல் மின்குமிழ்களின் பாவனைகள் அதிகரிக்கும் என்றும் அதனால் மின்சாரத்தட்டுப்பாடு ஓரளவு குறையும் என்றும் உதய கம்மனவில்ல கூறினார்.

அதேபோல் பெற்றோலிய வாகனங்களின் பாவனைகளைக் குறைக்கும் நோக்கில் இம்மாதம் முதலாம் திகதி முதல் வாகனங்களுக்கும் வரி விதிக்கப்படுகிறது.

அதன்படி வருடம் ஒன்றுக்கு மோட்டார் சைக்கிள் பாவனைக்கு 100 ரூபாவாகவும் கார் பாவனைக்கு 300 ரூபாவும் வரி விதிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (சி)

(9ஆம் பக்கத்தில் மற்றொரு செய்தி)

## கைத்தொலைபேசிப் பாவனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சுட்டிக்காட்டி, எனவே அந்தச் சட்ட விதிகளை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'ரிட்மனு' ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

கொழும்பு, நுகேகொடையைச் சேர்ந்த சட்டத்தரணி சுதர்ஸன என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அதன் தலைவர் மற்றும் ஆணையாளர் நாயகம் ஆகிய தரப்பினர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கைத்தொலைபேசி மற்றும் சி.டி.எம்.ஏ: தொலைபேசி போன்றவற்றைப் பதிவு செய்த பெயருடையவர் மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற சட்டவிதி இயற்கை நீதிக்கு முரணானது என்று இந்த மனுவில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய புதிய ஒழுங்கு விதிகளை ஒருதலைப்பட்சமாக ஆணைக்குழு கடந்த 12ஆம் திகதி வெளியிட்டது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

கணக்கீடு
A/L:- 2009 புதிய பிரிவு குறைமாத பங்குடமை முடிவுக் க/கு
ஆரம்பம் இன்று 11A.M
A/L:- 2010 புதிய பிரிவு வங்கிக்கணக் கிணங்கற் கூற்று
ஆரம்பம் நாளை 10A.M
S. தவா B.com (Hons)(Acc. SPL)
NEW SCIENCE HALL JAFFNA.

புதிய பிரிவு ஆரம்பம்
கணக்கீடு
Papar Class
Wed., Thu., 6.15 - 7.15 a.m
ஆரம்பம்:
06.08.2008 (புதன்)
6.15 p.m
I.B.S சுண்டுக்குளி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்

## பொலிஸ் மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இயக்கத்தால் நேற்று நடத்தப்பட்ட போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகரவே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்ததைத் தொடர்ந்து அம்மாகாணத்திற்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அம்மாகாண முதலமைச்சர் பிள்ளையானும் இன்னும் சிலரும் அரசிடம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

மேற்படி அதிகாரங்கள் எந்த மாகாணங்களிலும் இப்போது நடைமுறையில் இல்லை. அப்படி இருக்கையில் கிழக்கு மாகாணத்திற்கு இந்த அதிகாரங்களைக் கேட்பது பொருத்தமானதல்ல.,

அவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் நாடு தானாகப் பிரிந்து செல்வதற்கு அந்த அதிகாரங்கள் மறைமுகமாக உதவும்.

படையினர் பல உயிர்களைத் தியாகம் செய்து கிழக்கைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்தனர். இந்த நிலையில் இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டால் படையினரின் வெற்றிக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். அவர்கள் தியாகத்தை அவமதிப்பதாக அமைந்துவிடும்.

தற்போது ஜனாதிபதியின் தலைமையில் வடக்கில் திறமையான யுத்தம் ஒன்று இடம்பெறுகின்றது. இந்த யுத்தத்திற்குத் தடை ஏற்படுத்தவும் இந்த அதிகார வழங்கல் துணைபோகும்.

ஆகவே, அரசு ஒருபோதும் மேற்படி அதிகாரங்களை வழங்கி நாட்டைப் பிரித் துக் கொடுக்க முயலக்கூடாது. அது இந்நாட்டுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

அவ்வாறானதொரு நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முற்பட்டால் அதை[illegible] தடுத்து நிறுத்த இந்த நாட்டு மக்க[illegible] கிளர்ந்தெழ வேண்டும் - என்றார். (சி)

## கோத்தபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கடத்தல்கள், சித்திரவதைகள், படுகொலைகள் ஆகியவற்றை மேற்கொண்டுவரும் அரசில் அங்கும் வகிக்கும், அமெரிக்கக் குடியுரிமை கொண்ட அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிராக அமெரிக்கா, தனது நாட்டுக் குடிமகன்கள் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செய[illegible]ளரும்அந்நாட்டு ஜனாதிபதியின் சகோத[illegible]மான கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கக் குடிமகன். அவருக்கு கலிபோர்னியாவின் டிமாஸ் பகுதியில் வீடு உண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் இன்னொரு சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவும் அமெரிக்கக் குடிமகன். அவருக்கு கலிபோர்னியா போன்டோனா பகுதியில் வீடு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அமெரிக்காவில் வசிக்கும் தகுதியளிக்கக்கூடிய 'கிறீன் கார்ட்' உடையவர். அவருக்கு ஒக்கலாமா பகுதியில் வீடு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேர்பியாவின் மிலோசவிக், பொஸ்னியாவின் கராடிக், சூடானின் ஓமர் பசீர் ஆகியோர் மேற்கொண்ட - அல்லது அதனைவிடப் பாரதூரமான - இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் மூன்று அமெரிக்க குடிமகன்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க இனச்சுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு தயாராகிவருகிறது.

இதுவிடயத்தைத் தக்க ஆதாரங்களுடன் அமெரிக்க அரசின் பார்வைக்கு கொண்டுவருவதற்கு, அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் புரூஸ் பெய்னி தலைமையில் இனச்சுத்திகரிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

போர்க்குற்றங்களைப் புரியும் அமெரிக்கக் குடிமகன்களையும், குடிமகன் அல்லாதவரையும் கூட அமெரிக்கச் சட்டம் கடுமையாகத் தண்டிக்கிறது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விசேட பரீட்சை வெளியீடு - 02

ஆசிரியர்கள்:-
திரு.எஸ்.தயாளலிங்கம் &
திரு.பி.பத்மநேசன், திருமலை.




Model Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries, August 2008

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2008

## வினாத்தாள் - I

மாணவர் சுட்டெண்:- ............................ நேரம் 45 நிமிடங்கள்


பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றும் 9 இற்குக் குறைவான ஓர் எண் பெறுமானத்தைக் கொண்டுள்ளன. தரவுகளை ஆதாரமாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.



01. இன் பெறுமானம் யாது?
1) 2 2) 1 3) 4

02. இன் பெறுமானம் யாது?
1) 2 2) 3 3) 4

03. விருந்து ஒன்றில் கலந்துகொண்ட 32 பேரில் சைவ உணவு சாப்பிடுவோர் 12 பேர் ஆவர். இவற்றைக் குறிக்கும் உரு எது?
1) 2) 3)



04. கீழே உள்ள வினாவில் முதலில் உள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க
1) 2) 3)



05. வெற்றுக் கூண்டுக்குள் வரவேண்டிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
XII + ☐ = XXII 1) X + VII 2) IV + VI 3) II + VII

கீழே காணப்படும் உருக்களின் அடிப்படையாகக்கொண்டு 6–7 வரையான வினாக்களிற்கான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




06. மிகக் கூடிய நிறையுடையவர் யார்? ............................................

07. மிகக் குறைந்த நிறையுடையவர் யார்? ............................................

08 தொடக்கம் 10 வரையான வினாக்களிற்கு அட்டவணையை அவதானித்துப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்து கோடிடுக.

| A | B | C | D |
|---|---|---|---|
| பந்து | நட்டம் | சாரம் | அகத்தி |
| கந்து | கட்டம் | தாரம் | அகழி |
| சந்து | மட்டம் | வாரம் | அகவும் |
| வந்து | பட்டம் | பாரம் | அகரம் |
| தந்து | தட்டம் | காரம் | அகல் |

08. நிரல் B யில் சேர்க்கமுடியாத சொல் யாது?
1) வட்டம். 2) சட்டம். 3) பதட்டம்.

09. நிரல் D யில் சேர்க்கமுடியாத சொல் யாது?
1) அகவம். 2) அகாலம். 3) அகழ்.

10. நிரல் A யில் சேர்க்கமுடியாத சொல் யாது?
1) ஐந்து. 2) மந்து. 3) நந்து.


11 – 12 வரையான வினாக்களிற்கு அருகிலுள்ள அட்டவணையை அவதானித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக. அவ அட்டவணையில் A,B,C,D எனும் எழுத்துக்களுக்கு எண்களை இடும போது ஒவ்வொரு நிரலினதும், நிரையினதும் கூட்டுத்தொகை 200 ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | 41 | 26 | 53 | E |
| 41 | 33 | 34 | D | 57 |
| 50 | 42 | C | 47 | 19 |
| 47 | B | 50 | 25 | 37 |
| A | 43 | 48 | 40 | 39 |




11. எழுத்து A இற்குப் பொருத்தமான எண் யாது?
1) 31 2) 30 3) 32

12. எழுத்து C யிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 34 2) 38 3) 42

13. 


A,B என்னும் நேர்கோடு சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. AB யின் நீளம் 24m எனின், XY யிற்கு இடைப்பட்ட நீளம் எத்தனை cm? ............................................


கீழே தரப்பட்டுள்ள A,B,C, ஆகிய உருக்களை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.




14. தரப்பட்ட உருக்களில் எந்தெந்த உருக்கள் ஒரேயளவான பரப்பளவைக் கொண்டுள்ளன?
1) Aயும், Bயும். 2) Bயும், Cயும். 3) Aயும், Cயும். 4) Cயும், Dயும்.

15. தரப்பட்ட உருக்களில் அதிகளவு பரப்பினைக் கொண்ட உரு எது?
1) D 2) B 3) C 4) A

16. அருகில் தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?
1) 40cm 2) 44cm 3) 48cm




17. கீழே தரப்பட்டுள்ள சொல்லில் சரியாக எழுதப்பட்டுள்ள சொல்வளம் எது?
1) கைகோர்த்து 2) கைகோர்து. 3) கைகோத்து.

18. சோழப் பெருமன்னன் அழகிய கோயிலை நுணுக்கமாகக் கட்டினான். இவ்வாக்கியத்தில் கோயில் என்ற சொல் எதுவாக இடம்பெற்றுள்ளது?
1) செயப்படுபொருள். 2) எழுவாய். 3) அடைமொழியாக.

19. தரப்பட்டுள்ள கடிகாரத்தில் காணப்படும் நேரத்தை முகம்பார்க்கும் கண்ணாடியினூடாகப் பார்க்கும்பொழுது தோன்றும் நேரத்தை நியமநேரத்தில் தருக?
............................................




நேற்று முன்தினத்திற்கு முதல் நாள் 21ஆம் திகதி. நாளை மறுதினத்திற்கு அடுத்த நாள் புதன்கிழமையாகும் எனின்,

20. 21ஆம் திகதி என்ன கிழமையாகும்? ............................................

21. புதன்கிழமை எத்தனையாந் திகதியாகும்? ............................................

22. பின்வரும் உருவில் → இனால் காட்டப்பட்டுள்ள அட்டைக்கு உரிய எண்ணைக் காட்டும் விடை யாது?




1) 4
2) 9
3) 2

கீழே அ, ஆ, இ, ஈ என்ற அடைப்புக்குள் சில பழங்களும் சில பிராணிகளும் சில உபகரணங்களும் சில தாவரங்களும் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|
| மரநாய் | வேம்பு | ஒட்டகம் | தாளை |
| கீழ்க்காய் நெல்லி | தவளை | அப்பிள் | பாலை |
| மாமரம் | வௌவால் | குதிரை | சிங்கம் |
| அன்னாசிப்பழம் | றம்புட்டான் | கோழி | கழுகு |

23. மருந்து மூலிகைகளாகப் பயன்படும் தாவரம் உள்ள அடைப்புக்கள் எவை?
1) அ, ஈ 2) அ, ஆ 3) ஈ, இ

24. இரண்டு பிராணிகள் வீதம் உள்ள அடைப்புக்குள் எவை?
1) ஈ, இ 2) இ, ஆ 3) ஈ, ஆ

கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் ஒரு சொல் வேறுபட்டது. அவ்வாறு வேறுபட்ட சொல் உள்ள கூட்டத்தைத் தெரிந்து கோடிடுக.

25. 1) கரி, குஞ்சரம், வேழம், கயம். 2) ஊன், உண்டி, ஆகாரம், அடிசில்.
3) சர்ப்பம், அரவம், கட்செவி, அழி.

26. 1) சயனம், உறக்கம், துயில், தூக்கம். 2) ஆசை, பற்று, வேட்கை, களிப்பு.
3) வரை, குன்று, பருவதம், புதரம்.



தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களுக்குரிய எண் பெறுமானத்தைக் கண்டுபிடித்து வினாவில் வரவேண்டிய சரியான எண்ணைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.


27. H 3 S 2 + 4 R 5 M = 9 5 8 6 ஆயின், M 4 H 6 + 5 S 2 R = ............

வெற்றிடத்தில் வரவேண்டிய எண் யாது?
1) 8779 2) 7987 3) 9778

பின்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்க.
A, B, C, D - திருகோணமலையில் வசிப்பவர்கள். E, F, G, H - கந்தளாயில் வசிப்பவர்கள்.
C, D, E - ஆண்கள். B, E, F - 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

28. பின்வருவோரில் எவர் திருகோணமலையில் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்?
1) A 2) B 3) F 4) G

29. 18 வயதிற்கு மேற்பட்ட எந்த இரு பெண்கள் திருகோணமலையிலும் கந்தளாயிலும் வசிக்கின்றனர்?
1) AF 2) AG 4) BF 4) BH

30. 
இவ் உருவில் எத்தனை நாற்பக்கல்கள் உண்டு? ............................................

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

31. இங்கு விபரிக்கப்பட்டுள்ள மிருகம் எது?
* சூடான இடத்தில் சுருண்டு படுக்குமாம்.
* கண்ணை மூடி அருந்துமாம்.
* வாலைச் சிலிர்த்துப் பயம்காட்டுமாம்.

1) 2) 3)



32. இங்குள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.
இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?



1) அ, இ / இ, ஈ 2) ஆ, இ / அ, ஈ 3) அ, இ / ஆ, ஈ


33. 894 → 948 → 489 → ☐ இக் கோலத்திற்கு ஏற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண் யாது?
1) 849 2) 894 3) 984

34. 
ஒரே அளவு நீளமும் அகலமும் உடைய கடதாசிக் கீலங்கள் 6 உருவில் காட்டியவாறு தகடொன்றில் ஒட்டப்பட்டுள்ளது. உருவில் குறுகியபக்க நீளம் 3cm எனின், அதன் அடுத்த பக்கத்தின் நீளத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
............................................

35. நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 18km தூரப் பிரயாணத்தை நிறைவு செய்தனர். ஒரு மனிதருக்கு பிரயாணத்திற்கு எடுத்த நேரம் எவ்வளவு? ............................................


36. வெற்றுக்கூண்டில் வரவேண்டிய எண் யாது?
............................................

| | | |
|---|---|---|
| 76 | 69 | 62 |
| 83 | 90 | 55 |
| | 41 | 48 |

37. 



தரப்பட்டுள்ள பெரிய உருவின் அளவுகளைக்கொண்டு உள்ளிருக்கும் சிறிய உருவின் சுற்றளவைக் காண்க.
1) 16cm 2) 20cm
3) 14cm

அருகில் காணப்படும் உருவை அவதானித்து 38ஆம், 39ஆம் வினாக்களுக்கு விடை தருக.





38. வட்டம், சதுரம், முக்கோணம் ஆகிய மூன்றிற்கும் உரித்தான இலக்கம் எது?
1) 6 2) 8 3) 5

39. சதுரத்திற்கும் வட்டத்திற்கும் மாத்திரம் உரித்தான இலக்கம் எது?
1) 2 2) 8 3) 6

40. 
இங்கு உருக்கள் ஏதோ ஒரு கோலத்திற்கு ஏற்ப வ... ...பட்டுள்ளன. ...ன்படி வெற்றுக் கூண்டுக்குள் வரவேண்டிய உருக்கள் யாவை?

1) 2) 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II

**கீழ்வரும் பந்தியை வாசித்து விளங்கிக்கொண்டு அதன் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.**

எல்லைகளற்றுப் பரந்து விரிந்திருந்த வாவியில் சாகரம் போல் சிறுசிறு அலைகள் தோன்றும் அளவிற்கு நீர்நிரம்பிக் காணப்பட்டது. நீரைத் தேக்கிவைப்பதற்காக அமைக்கப்பட்ட அணைக்கட்டு நீண்டு உயர்ந்த பருவதம போல் தோற்றமளித்தது. அணைக்கட்டிற்குக் கீழாக கண்ணுக்கெட்டாத தூரம்வரை காட்சியளித்த கழனிகள் பச்சைப பசேல் என சமதரைமீது பச்சைக்கம்பளம் விரித்தது போல் காணப்படும். அதன் அருகருகே நின்று பசியபுற்களை மேய்ந்துகொண்டிருக்கும் ஆநிரையும், அழகாகப் பறந்துதிரியும் பட்சிகளும் இயற்கையின் அழகை மெருகூட்டிக்கொண் டிருக்கும். அவ்விடத்திற்கு செல்லும் மனிதர்களால் அவ்விடத்தின் குளிர்மையையும் செழுமையையும மெல்லமெல்ல உணர முடியும்.

01. கழனி என்பதன் ஒத்தபொருள் யாது? ..............................
02. வாவியில் நிரம்பிக் காணப்பட்ட பொருள் யாது? ..............................
03. பந்தியில் இடம்பெற்ற அடுக்குமொழிச் சொற்றொடர் ஒன்று எழுதுக. ..............................
04. பச்சைக்கம்பளம் விரித்தாற்போற் காணப்பட்டது எது? ..............................
05. அருகருகே என்ற சொல்லைப் பிரித்தெழுதுக. ..............................
06. கண்ணுக்கெட்டாத தூரம்வரை என்ற தொடரின் மூலம் உணர்த்தப்படும் கருத்து யாது? ..............................
07. பந்தியில் இடம்பெற்ற உயர்திணைச் சொல் ஒன்று எழுதுக. ..............................
08. பருவதம் என்பதன் பொருள் யாது? ..............................
09. அணைக்கட்டு எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது? ..............................
10. குளிர்மையையும், செழுமையையும் உணர்வதற்கு எங்கு செல்லவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**


11. We buy .............................. From the post office. (books, pencils, stamps)

**பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

12. இது என்ன? ..............................

**பின்வரும் சிங்கள உரையாடலை தமிழ் எழுத்துக்களில் தமிழில் எழுதுக.**

13.




**கீழே தரப்பட்டுள்ள அடைப்பிற்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.**

**இக்கிரி, எள்ளு, ஆமணக்கு, கற்றாளை, நிலக்கடலை, முசுமுசுக்கை, கோதுமை**

உருக்களுக்குப் பொருத்தமான பெயர்களைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் மீது எழுதுக.

14. 15. 16. 17. 18.



**19 தொடக்கம் 28 வரையான வினாக்களிற்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.**

19. ஆண்டுக்கு ஒருதடவை மாத்திரம் காய்க்கும் காய் எது?
   1) பப்பாசி. 2) கொய்யா. 3) மரமுந்திரிகை.
20. காற்றின் உதவியுடன் இனம் பரவும் தாவரம் எது?
   1) திப்பிலி. 2) சீதேவியார் செங்கழுநீர். 3) புன்னை.
21. நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக்குவளையில் சிறிதளவு தேங்காய் எண்ணையை இட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் அவதானிக்கக்கூடிய சரியான தோற்றம் யாது?






தே.எ நீர் நீர்

22.



மஞ்சள் நிறப்பின்னணியுடன் காணப்படும் இவ்வீதிச்சமிஞ்ஞையினால் வெளிப்படுத்தப்படுவது யாது?
   1) பிள்ளைகள் பாதையைக்கடக்குமிடம் முன்னால்.
   2) பாதசாரிகள் பாதையைக்கடக்குமிடம் முன்னால்.
   3) பாதசாரிகள் பாதையைக்கடக்குமிடம்.
23. புளியமிலைகளின் வடிவத்தை ஒத்த வடிவமுடைய இலைகள் இருக்கும் தாவரம் எது?
   1) அகத்தி. 2) தொட்டாற்சுருங்கி. 3) வல்லாரை.
24. தண்டில் காய்க்கும் தாவரம் எது?
   1) எலுமிச்சை. 2) மங்குஸ்தான். 3) விளிம்பி.
25. அதிகளவில் உடற்சக்தி விரயமாகும் விளையாட்டு அல்லாதது எது?
   1) பளுத்தூக்குதல். 2) கரம்அடித்தல். 3) கயிறிழுத்தல்.
26. அயடீன் கலந்த உப்பினை உட்கொள்ளாமையினால் ஏற்படும் நோய் எது?
   1) நீரிழிவு. 2) மாலைக்கண். 3) கண்டமாலை.
27. தொற்று நோய் பரவும் காரணி அல்லாதது
   1) நீர். 2) காற்று. 3) ஒளி.
28. சர்வதேசமைதானத்தில் உள்ள ஓட்டப்பாதைகளின் எண்ணிக்கை
   1) 6 2) 8 3) 12

**பல்வேறு தொழில்களுக்குப் பயன்படுத்தும் சில கருவிகள் கீழே தரப்பட்டுள்ளன.**




**கீழுள்ள வேலைகளைச் செய்வதற்கு மிகப் பொருத்தமான கருவியின் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

29. மரக்குற்றியில் உருவங்களைச் செதுக்குவதற்கு ..............................
30. மாசிக்கருவாட்டினைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டுதல் ..............................
31. மரக்குற்றியில் துளையிடுவதற்கு ..............................
32. கம்பிகளை இறுகப் பிணைத்தல் ..............................

**கீழே உள்ள இசைக்கருவிகள் எவ்வகையைச் சார்ந்தவை என்பதைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

33. 34. 35.



**கீழே உள்ள விளையாட்டுக்கள் சுவட்டு நிகழ்ச்சிகளா? மைதான நிகழ்ச்சிகளா? என்பதனைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

36. 37. 38.



**பின்வரும் கணிதச் செய்கைகளுக்கு விடை தருக.**

39. மூன்று கிலோகிராம் மாவின் விலை ரூபா 66 எனின், 250 கிராம் மாவின் விலை யாது?
   ..............................
40. ராதாவை விட மாலா ரூபா30/= குறைவாக வைத்திருந்தாள். அவர்கள் இருவரிடமும் மொத்தம் 100 ரூபா இருந்தால் மாலாவிடம் மொத்தம் எத்தனை ரூபா இருக்கும்? ..............................
41. சுரேஸ் என்பவன் 60Km தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் நிமல் என்பவன் 100Km தூரத்தை ஓடுவான். நிமல் 50Km தூரத்தை ஓட எடுக்கும் நேரத்தில் சஸ்வி என்பவன் 40Km தூரத்தை ஓடுவான். இவர்களில் மெல்ல ஓடுபவன் யார்? ..............................



42. ஒரு கடையில் விற்பனைக்கிருந்த 65Kg சீனியில் 38Kg 75g சீனி விற்கப்பட்டதெனின், எஞ்சியுள்ள சீனியின் அளவு யாது? ..............................
43. ஒருவர் 7 மணி 05 நிமிடங்கள் பயணம் செய்து பி.ப 5 மணிக்கு தனது பிரயாணத்தை நிறைவு செய்து கொண்டார் எனின், அவர் பிரயாணத்தை ஆரம்பித்த நேரம் யாது? ..............................
44. ஒரு தொட்டியில் நிறம்பியிருந்த 480l நீரில் 5/6 பங்கு நீர் உபயோகிக்கப்பட்டால் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?
   ..............................
45. ஒவ்வொரு நாளும் 8.36m.m மழைவீழ்ச்சி இடம்பெற்றால் குறிப்பிட்ட 4 நாட்கள் இடம்பெற்ற மொத்த மழைவீழ்ச்சியின் அளவு யாது? ..............................

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளின் கீழ்க் கீறிடுக.**

46. "வெற்றிலை" என்ற சொல் சரியாக பிரித்தெழுதப்பட்டுள்ள முறை எது?
   1) வெற்றி + இலை. 2) வெறுமை + இலை. 3) வெற் + றிலை.
47. பின்வரும் சொல்லில் எழுத்துப் பிழையற்ற சொல் எது?
   1) அற்பணிப்பு. 2) அப்பணிப்பு. 3) அர்ப்பணிப்பு.
48. "படீரென" பட்டாசு வெடித்தது. இதில் வரும் படீரென என்பது எவ்வகைச் சொல்லாகும்?
   1) அடுக்குமொழி. 2) இரட்டைக்கிளவி. 3) ஒலிக்குறிப்பு.
49. அழகியகோயிலை இராஜஇராஜ சோழமன்னன் நுட்பமாக கட்டுவித்தான் இதில்வரும் செயப்படுபொருள் அடைமொழி யாது?
   1) நுட்பமாக. 2) அழகிய. 3) கோயிலை.
50. ஆவணங்களைப் பேணிவைக்கும் அட்டை எவ்வாறு அழைக்கப்படும்?
   1) கோர்வைஅட்டை. 2) கோவைஅட்டை. 3) கோல்வைஅட்டை.

**பின்வரும் தரவுகளை அவதானித்து கணிதச்செய்கைகளுக்கு விடை தருக.**

குறித்த தினத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட எரிபொருளின் அளவு தரப்பட்டுள்ளது.

**01. விற்பனை செய்யப்பட்ட பெற்றோலின் அளவு 3600l.**
**02. விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெய்யின் அளவு பெற்றோலின் அளவின் ¾ பங்கு.**
**03. விற்பனை செய்யப்பட்ட டீசலின் அளவு மண்ணெண்ணெய்யின் அளவைப்போல் 3 மடங்கு.**
**04. விற்பனை செய்யப்பட்ட மசகு எண்ணெய்யின் அளவு விற்பனை செய்யப்பட்ட பெற்றோலின் அளவின ¼ பங்காகும்.**

51. அன்றையதினம் விற்பனை செய்யப்பட்ட மசகு எண்ணெய்யின் அளவு யாது? ..............................
52. விற்பனை செய்யப்பட்ட மண்ணெண்ணெய்யின் அளவு யாது? ..............................
53. விற்பனை செய்யப்பட்ட டீசலின் அளவு யாது? ..............................
54. ஒரு லீற்றர் பெற்றோல் ரூபா 157 எனின், 5l பெற்றோல் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு? ..............................
55. விற்பனை செய்யப்பட்ட பெற்றோலுக்கும் டீசலுக்கும் இடையிலான அளவு வேறுபாடு யாது? ..............................
56. அன்றைய தினம் விற்பனை செய்யப்பட்ட அனைத்து எரிபொருள்களினதும் மொத்த அளவு யாது? ..............................

**பின்வரும் சம்பவத்தின் தொடர்ச்சியாக ஆறு வாக்கியங்களை நான்கு சொற்களுக்கு குறையாமல் எழுதுக.**

நீண்ட நாட்களாக வியாதிக்குள்ளாகியிருந்த நோயாளி பல வைத்தியர்களிடம் தனது நோயை கூறிச் சிகிச்சை பெற்றபோதும் எதுவித பயனும் அளிக்கவில்லை. இறுதியாக ராஜா என்ற வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றதும் ஓரிரு வாரங்களில் பூரண குணமடைந்து விட்டார். இதனால் அந்த நோயாளி மீண்டும் ஒருமுறை ராஜாவைச் (வைத்தியரை) சந்தித்து தனது நன்றியைத் தெரிவித்தார். அப்பொழுது நீர்தான் அந்த ராஜாவாக இருந்தால் உமது மனதில் எத்தகைய எண்ணங்கள் தோன்றும்.

57. ..............................
58. ..............................
59. ..............................
60. ..............................
61. ..............................
62. ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org